Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-16

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | மார்கழி-17 | 01-01-2005 | சனிக்கிழமை | ஓசை -318



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-11118)

## அம்பாறையில் தமிழ்க் கிராமங்களுக்கு உரிய நிவாரணம் சென்றடையவில்லை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் இன்னமும் பல கிராமங்களுக்கு உரிய நிவாரண உதவிகள் சென்றடையவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதிலும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் தமிழ்க் கிராமங்களில் நிவாரணங்கள் மிகவும் குறைந்தளவிலேயே கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை காரைதீவு பிரதேசத்திற்குரிய நிவாரணங்கள் வந்துசேரவில்லை என அங்கு இயங்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது. எனவே அங்கு அவசரமாக நிவாரணப்பொருட்களை அனுப்பி வைக்குமாறு தமிழர் புனர்வாழ்வுக்கழகம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயகத்திற்கு நிவாரணம்; படைத்தரப்பு,அதிகாரிகள் முட்டுக்கட்டை!

(திருகோணமலை)

தமிழ் மக்களுக்கு நிவாரணங்கள் சென்றடைவதைத் தடை செய்வதிலும், அவற்றைத் திசை திருப்பி விடுவதிலும், சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பும்,சிங்கள அரச அதிகாரிகள் மட்டத்திலும், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, கிழக்கில் உரியவகையில் நிவாரணங்கள் பகிர்ந்தளிக்கப்படவில்லை எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. திருகோணமலை மாவட்டத்திற்கு எடுத்து வரப்படும் நிவாரணப் பொருட்கள் இராணுவத்தால் மாவட்ட செயல

(16ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டு நிவாரணங்கள் குவிகின்றபோதும்

# சிங்கள அரசால் தமிழர் பிரதேசம் புறக்கணிப்பு!

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஈழநாதம் வாசகர்கள், விநியோகஸ்தர்கள் விளம்பரதாரர்கள் உட்பட அனைத்துத் தமிழீழ மக்களுக்கும் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## உதவிகள் பகிர்ந்தளிக்கப்படவில்லை

(கொழும்பு)

**வெளிநாடுகளில் இருந்து பெருமளவில் நிவாரணப்பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் கொழும்பை வந்தடைந்துள்ள போதும் அவை எவையும் வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவில்லை. சிங்களப்பகுதிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றன.**

சுனாமி அலைகளினால் பாதிக்கப்பட்ட பின்னர் முதற்கட்ட அவசர உதவியாக இருபதிற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து மருந்துப்பொருட்கள் உட்பட்ட அவசர தேவைகளுக்கான நிவாரணப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அத்தோடு மீட்புப்

(16ஆம் பக்கம் பார்க்க)

### அனர்த்தத்தினால் கைவிடப்பட்ட

## மக்களின் உடமைகளை சூறையாடும் படையினர்!

சேதமுற்ற மக்களது வீடுகளில் கைவிடப்பட்ட பொருட்கள், பொதிகள் சிறிலங்கா இராணுவத்தினர் கத்தியால் கிழித்துப் பொருட்களை எடுத்து கையகப்படுத்துவதாகவும், வீட்டு யன்னல்கள், கதவுகளை உடைத்துச் சென்று காவலரண்களை அமைப்பதாகவும் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாதிக்கப்பட்ட மக்களிற்கான நிவாரணப் பணிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது. படைத்தரப்பினரது இம்மனிதனேயமற்றதும், அத்துமீறலுமான செயற்பாடு குறித்து யாழ். மாவட்ட அரசியல்துறையினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கண்டனம் தெரிவித்துள்ளனர்.(27)

## சுனாமி உருவான மையத்தை மீட்புக்குழு சென்றடைந்தது!

(லண்டன்)

பாரிய அழிவை ஏற்படுத்திய 'சுனாமி' கடற்கொந்தளிப்பு உருவான இடத்தின் மையப்பகுதியான சுமாத்திராத்தீவின் மேற்குப் பகுதியான மேலயோ நகரம் தொண்ணூறு சதவீதம் தரைமட்டமாகக் காட்சி அளிப்பதாகவும், உயிர்தப்பியவர்கள் நாட்கணக்காகப் பட்டினி கிடக்கவேண்டிய அவலம் ஏற்பட்டதாகவும் அந்நாட்டு கடற்படை தெரிவித்துள்ளது.

இந்தோனேசியக்கடற்படையினர் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் கடல் மார்க்கமாக இப்பகுதிக்குச் சென்று பார்வையிட்ட பின்னரே அங்கு நிகழ்ந்த அவலத்தை வெளியிட்டுள்ளனர்.

இங்கு தற்போது தான் நிவாரணப் பணியாளர்கள் சென்றடைந்துள்ளனர். அங்கு சென்ற நிவாரணப் பணியாளர்கள் அமைப்பான மெட்சாகாகோட்டியே அமைப்பைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறுகையில், அங்கு தான் கண்ட காட்சிகளை வர்ணிக்கப் பேரழிவு என்ற வார்த்தைக்கே வலிமை போதாது என்று கூறி

(16ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

26.12.2004 அன்று முல்லைத்தீவுப் பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக கடற்புலி துணைப்படை வீரர் ஒருவர் சாவடைந்துள்ளார். கப்டன் - மகாலிங்கம் (இராஜப்பன் - மகாலிங்கம், ஆதிகோவிலடி வல்வெட்டித்துறை,யாழ்ப்பாணம்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### சுனாமி அலைகளில்

## சிக்கிப் பிழைத்தோர் சுவாச நோய்களால் அவதி!

யாழ்.குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட "சுனாமி" கடற்பேரலையில் மூழ்கிப் பிழைத்தோருக்கு சுவாசநோய்கள் ஏற்பட்டிருப்பதாக வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடலடியில் ஏற்பட்ட பூகம்பத்தின் தாக்கத்தினால் ஏற்பட்ட இச் சுனாமி கடற்பேரலையுடன் கடலடியில் இருக்கும் மனித உடலுக்கு (16ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி அனர்த்தத்தினால் வடக்கு-கிழக்கு இழப்புக்களும், பாதிப்பும்

| மாவட்டம் | கண்டுபிடிக்கப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை | காயமடைந்தவர்களின் எண்ணிக்கை | காணாமற்போனவர்களின் எண்ணிக்கை | இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1) யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு | 771 | 539 | 2000 | 16174 |
| 2) முல்லைத்தீவு | 1622 | 4817 | 3180 | 5800 |
| 3) திருகோணமலை | 947 | 2238 | 2431 | 37821 |
| 4) மட்டக்களப்பு | 2040 | 2100 | 6000 | 52617 |
| 5) அம்பாறை | 11225 | 2800 | 5300 | 44000 |
| மொத்தம் | 16605 | 12,494 | 18911 | 156412 |

☐ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகம். 5.00 பி.ப. 31-12-2004.

### கடலுணவுகளை தவிர்க்கவும்

கடந்த 26ஆம் திகதி இடம்பெற்ற நிலவதிர்வு காரணமாக ஏற்பட்ட பேரலை அனர்த்தத்தால் கடலுணவுகள் யாவும் மாசடைந்துள்ளதால் மறுஅறிவித்தல் வரைஇவ்வுணவுகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அனைவரையும் தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

## கனடா தமிழ்ச் சமூக வைத்தியக் குழு விரைவு!

தாயகத்தில் கடற்கோளினால் ஏற்பட்ட அனர்த்தங்களையடுத்து ஏற்பட்டு மருத்துவச் சீர்கேடு மற்றும் தொற்றுநோய் பரவும் அபாயம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு கனடா தமிழ் சமூகத்தைச் சார்ந்த மருத்துவர்கள் குழு ஒன்று நேற்று தாயகம் நோக்கிப் புறப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

### இன்று முதல் எட்டு ரூபா

இன்று முதல் ஈழநாதம் நாளேட்டின் விலை 8 ரூபாவாக இருக்கும் என்பதனை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம் இதுவரை தாங்கள் வழங்கி வந்த ஆதரவைத் தொடர்ந்தும் வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## வரிவிளம்பரம்

### பெற்றுக்கொள்ளவும்

சகல வகுப்புகளுக்குமான பாடப்புத்தகங்களும், கொப்பி வகைகளும் புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம். உயர்ச்சி புத்தகசாலை, துணுக்காய்சாலை, மல்லாவி. (4145)

### தென்னங்காணி விற்பனைக்குண்டு

சுதந்திரபுரம் மத்தியில் 20 ஏக்கர் தென்னம் தோட்டமும் 5 ஏக்கர் வயல் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ந.விக்னேஸ்வரன், இரட்னமாஸ் பாம், சுதந்திரபுரம் மத்தி, உடையார் கட்டு. (5508)

### வகுப்புக்கள் ஆரம்பம்

ஜேம்பிறிஜ் கல்லூரி கிளிநொச்சி தரம் 05.தொடக்கம்O/L வரையான வகுப்புக்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்- 01.01.2005 (சனிக்கிழமை 8.00A.M) (5448)

# இயற்கை அனர்த்தத்தால் பாதிப்புற்றோருக்கு உதவ

# கிளி.மாவட்ட அதிபர்,ஆசிரியர்களுக்கு அழைப்பு

## சனவரி 3ஆம் 4ஆம் திகதிகளில் சந்திப்பு

(அலுலக செய்தியாளர்)

இயற்கையின் சீற்றத்தில் ஒரு பெரும் கொடும் துயரம் எம் தேசத்தில் நிகழ்ந்துள்ளது. இயற்கை அனர்த்தத்தின் கொடூரத்திற்குட்பட்டு துன்புற்றிருக்கும் எம் உறவுகளுக்கு அவரச மனிதாபிமான உதவிகளை செய்யவேண்டியது எம் எல்லோருடையதும் தார்மீக கடமையாகும்.

இவ்வாறு கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கிளிநொச்சி வலய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது ஏற்பட்ட அனர்த்தத்தின் விளைவாகவே பாடசாலைகளுக்கான விடுமுறைகள் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த அனர்த்தத்தில் சிக்கி துயர் தோய்ந்த எம் மக்களுக்கு எதிர்வரும் 3ஆம் திகதி முதல் கிளி மாவட்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உதவும் பணியில் ஈடுபடவேண்டியுள்ளது.

எனவே இதற்கமைய அதிபர், ஆசிரியர்களுக்கான அவசர சந்திப்பு எதிர்வரும் 3ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

கிளி.மாவட்ட பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 3ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்திலும்,கரைச்சி கோட்டஆசிரியர்களுக்கு 3ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்திலும்,பளை கோட்ட அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் 3 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு பளை மத்திய கல்லூரியிலும்,பூநகரி கோட்ட அதிபர், ஆசிரியர்களுக்கு 4ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பூநகரி மகாவித்தியாலயத்திலும், கண்டாவளைக் கோட்ட அதிபர், ஆசிரியர்களுக்கு 4ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு தருமபுரம் மகாவித்தியாலத்திலும் நடைபெற வுள்ளதால் அன்றைய தினங்களில் அந்தந்த பகுதிகளில்நடைபெறும் கலந்துரையாடல்களில் அதிபர்கள், ஆசிரியர்களை தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கிளி.வலயக்கல்விப் பணிப்பாளர் வேண்டியுள்ளார்.(சோ)

### ஒத்திவைப்பு

(அலுவலக செய்தியாளர்)

போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இன்று முதல் எதிர்வரும் 6ஆம் திகதி வரை நடைபெறவிருந்த பிரதேச மட்ட உத்தியோகஸ்தர்களுக்கான திட்டமிடல் முகாமைத்துவம் சார்ந்த திறன் உயர்வுப் பயிற்சிநெறி குறித்தபடி திகதிகளில் நடைபெறமாட்டாதெனவும் பயிற்சிநடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார். (சோ)

### அவசர கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சகல விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள், உத்தியோகஸ்தர்கள் ஆகியோர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை மறுதினம் காலை 9.00 மணிக்கு கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்குறிப்பிட்டவர்கள் அனைவரையும் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தெரிவித்துள்ளார். (சோ)

## சுனாமியால் உயிரிழந்த மக்களுக்கு சாந்தி வேண்டிப் பிரார்த்தனை

(அலுவலக செய்தியாளர்)

கடந்த ஞாயிறன்று ஏற்பட்ட கடற்கொந்தளிப்பில் சிக்கி உயிரிழந்த மக்களிற்கு சாந்திவேண்டி நேற்று பிற்பகல் ஐந்து மணிக்கு கிளிநொச்சிக் கந்தசுவாமி ஆலயத்தில் ஆராதனை நிகழ்வு இடம்பெற்றது.

கிளிநொச்சி திருநெறிக்கழகம், கிளிநொச்சி சைவமங்கையற்கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற மேற்படி ஆராதனை நிகழ்வில் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் பொது மக்கள் பெருமளவில் ஆராதனையில் கலந்துகொண்டனர். (சோ)

## கண்ணீர் அஞ்சலி

26.12.2004 முல்லைத்தீவில் ஏற்பட்ட கடல் அனர்த்தத்தால் அகாலச்சாவடைந்த எமது சங்க பிரதம லிகிதர்
**திருமதி. கைலேஸ்வரி நவரட்ணம்** அவர்களதும்
எமது சங்க முல்லைத்தீவு கிளை விற்பனையாளர்
**திரு.இராயேஸ்குமார் அவர்களின் புதல்வி ரம்மியா**
எமது சங்க கிளை மேற்பார்வையாளர்
**திரு. அ.எ.மரியநாயகம் அவர்களின் சகோதரர் குடும்பத்தினருக்கும்** எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

பணியாளர் தொழிற்சங்கம்,
கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம்,
முல்லைத்தீவு.

(5083)

## கண்ணீர் அஞ்சலி

பூமியின் மடியில்
28
03
1953



காலனின் பிடியில்
26
12
2004

### திருமதி கைலேஸ்வரி நவரட்ணராசா
### (பிரதம லிகிதர்)

எமது சங்கத்தின் பிரதம லிகிதரான திருமதி. கைலேஸ்வரி நவரட்ணராசா அவர்கள் கடந்த 26.12.2004 ஞாயிற்றுக்கிழமை காலையில் இடம்பெற்ற கடல் அனர்த்தத்தில் அகால மரணமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது சங்கத்தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள் அனைவரும் இதயம் கலந்த கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

தகவல்:
தலைவர் பணிப்பாளர்
பணியாளர்கள்,
கரைதுறைப்பற்று ப.நோ.கூ.ச.
முல்லைத்தீவு,

(5082)

## துயர் பகிர்வு

### மருதநாயகம் இராமசாமிப்பிள்ளை

கிளிநொச்சி வர்த்தகர் சங்கத்தின் நீண்டகால அங்கத்தவரும், யாழ்.வீதி கல்விப்பணிமனை முன்பாக "செல்வம் சிற்றுண்டியகம்" என்னும் நிலையத்தின் உரிமையாளருமான அமரர் மருதநாயகம் இராமசாமிப்பிள்ளை அவர்கள் வத்தளையில் காலமான செய்திகேட்டு அதிர்ச்சியும், வேதனையும் அடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கட்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு ஆத்ம ஈடேற்றத்திற்கு இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வர்த்தகர்சங்கம்,
கிளிநொச்சி.

(சி-11057)

## இயற்கைப் பசிக்கு இரையாகிப்போன உறவுகளின்... ஆறாத்துயரில்...

2004.12.26 அன்று முல்லைத்தீவில் கடலலைத் தாக்குதலின் போது சாவைத் தழுவிக்கொண்ட முல்லைத்தீவு, மணற்குடியிருப்பைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் அவர்களின் மனைவியான சீத்தா மற்றும் அதே இடத்தைச்சேர்ந்த பிரபு-புனிதா தம்பதிகளின் அன்பு மகள் சஞ்சிகா ஆகியோருக்கும் இச் சம்பவத்தின் போது கொல்லப்பட்ட அனைத்து மக்களுக்கும் எனது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துகின்றேன்.

ஆயப்பகுதி,
புளியங்குளம்.

தகவல்:
மு.ராஜேஷ் (வாணன்)
(உடன்பிறவா சகோதரன்)

(5460)

## 8ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
1942
05
06



இறப்பு
2004
12
26

### அமரர் இராசையா-மகேஸ்வரி

வத்திராயன் - வடக்கு
தாளையடி.

பிறப்பு
1986
12
04



பிறப்பு
2004
12
26

### இரவீந்திரராசா-ஜெசி

உடுத்துறை - வடக்கு
தாளையடி.

கடல் புவிநடுக்க வெள்ளப்பெருக்குக் காரணமாக இறையடி சேர்ந்த இவர்களின் எட்டாம் நாள் கிரியைகள் நடைபெறும். இந்நாளில் 01.01.2005 இவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிராத்திப்பதோடு இதே சம்பவத்தில் சாவடைந்த அனைத்து தேச உறவுகளையும் நினைவு கூறுகின்றோம்.

தகவல்:
தனா, தயா,ஜெனோ.

(5520)

தற்காலிக முகவரி:
மூலிகைத்தோட்டம், 1ஆம் பகுதி,
திருவையாறு, கிளிநொச்சி.

# கடல் புவிநடுக்கம் மற்றும் சுனாமி அலைகளால் இந்தோனேசியாவில் ஒரு இலட்சம் பேர் உயிரிழப்பு!

## - ஆஷே மாநிலத்தில் பெரும் அவலம்

(ஜகார்த்தா)

**கடல் புவி நடுக்கம் மற்றும் அதனால் ஏற்பட்ட சுனாமி அலைகளின் தாக்கம் என்பவற்றால் இந்தோனேசியாவில் ஒரு இலட்சம் பேர் பலியாகி விட்டதாக தற்போது வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

சுமார் எண்பது ஆயிரம் பேர் பலியாகியிருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இத்தொகை ஒரு இலட்சத்தை எட்டி விடும் என இந்தோனேசிய அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

சுனாமி கடற்கொந்தளிப்பால் இந்தோனேசியாவில் இருந்து ஆபிரிக்கக் கண்டம் வரை ஓர் இலட்சத்து இருபத்தையாயிரம் பேர் வரை உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சுனாமி கொந்தளிப்பு இடம்பெற்ற இந்தோனேசியாவில் மட்டும் எண்பதாயிரம் பேர் வரை கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தத்தொகை ஓர்இலட்சம் பேர் வரை இருக்கும் என அந்நாட்டின் சுகாதார அமைச்சர் அறிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க கடல்கொந்தளிப்பால் பெரிதும் பாதிப்புக்குள்ளான இந்தோனேசியாவின் ஆஷே மாகாணத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இங்கு நேற்றைய தினம் மக்கள் எரிபொருளைப் பெறுவதற்காக நீண்ட வரிசையில் நின்றனர்.

தனிநாடு கோரிப் போராடும் ஆஷே மாநில மக்களில் சுமார் 5 வீதமானோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கடல் நிலநடுக்கம் மற்றும் அதனைத் தொடர்ந்ததான சுனாமி அலை தாக்கம் என்பவற்றால் பலியாகி விட்டமை குறிப்பிடத்தக்கது.



இந்தோனேசியாவின் ஆஷே மாநிலத்தில் சுனாமியின் தாக்கத்தின் பின் எரிபொருளிற்கு வரிசையில் நிற்கும் மக்கள்.

### சுமாத்திராவில் நிலநடுக்கம்!

சுமாத்திரா தீவின் வடக்கு பகுதி யில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.48 மணி அளவில் 5.2 ரிக்டர் அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது இதனை மக்கள் உணர்ந்ததும் பத்தியில் வீடுகளை விட்டு வெளியே ஓடிச் சென்றனர்.

-சுனாமி அனர்த்தத்தையடுத்து-

## உலக நாடுகள் பலவற்றில் புத்தாண்டு நிகழ்வுகள் ரத்து!

தெற்காசியாவில் கடற்கொந்தளிப்பால் ஏற்பட்ட மிகமோசமான நிலையைக் கருத்திற் கொண்டு உலகின் பல நகரங்கள் புத்தாண்டு நிகழ்ச்சிகளை இரத்துச் செய்துள்ளன.

உலக நாடுகளில் புதுவருடக் கொண்டாட்டங்கள் மிகவும் குதூகலமாகக் கொண்டாடப்படுவது வழமையான ஒன்று.

ஆனால் கடற்கொந்தளிப்பால் தெற்காசியாவில் ஏற்பட்ட பாரிய உயிரிழப்புக்களையும், அவலங்களையும் கருத்திற்கொண்டே இம்முறை புதுவருட நிகழ்வுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை இந்தக் கடற்கொந்தளிப்பால் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திக்காக அனுஷ்டிக்கப்பட்ட ஒரு நிமிட மௌன அஞ்சலி நிகழ்வை அவுஸ்திரேலியா தலைமை தாங்கி நடத்தியுள்ளது.

### பாதிப்புற்றோருக்கு உதவ சர்வதேசக் கூட்டமைப்பு

(வோஷிங்டன்)

பூமிஅதிர்ச்சி மற்றும் சுனாமி' கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா நாடுகளைச் சேர்த்து அமெரிக்கா தலைமையில் சர்வதேச கூட்டமைப்பு ஒன்றை தொடங்கி இருப்பதாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்



இந்தோனேசியாவின் இஸ்லாமியர் ஒருவர் ஜகார்த்தாப் பள்ளிவாசலில் மிகுந்த கவலையுடன் தொழுகையில் ஈடுபடுகின்றார்.

## ஆர்ஜென்டீனாவில் இரவு விடுதியில் தீ விபத்து 150 இற்கும் மேலானோர் பலி; 260 பேர் காயம்!

(பியூனஸ்அயர்ஸ்)

ஆர்ஜென்டீனா நாட்டின் தலைநகர் பியூனஸ் அயர்ஸில் பிரபலமான ரிபப்ளிக்கா டி-லா-குரோக் மேனன் எனும் இரவு விடுதியில் இடம்பெற்ற தீ விபத்தில் 149 பேர் பலியாகினர்.

நேற்று முன்தினம் நள்ளிரவில் இந்த விடுதியில் திடீர் என்று தீப்பிடித்தது. தீ மளமளவென்று நடனமாடிக்கொண்டிருந்தோர் அரங்கிற்கும் பரவியது. அப்போது அங்கு 1500 இற்கும் மேற்பட்டவர்கள் நடனமாடிக் கொண்டு இருந்தனர். அவர்கள் தீப்பிடித்ததும் ஓட முயன்றனர். சிறிய வாசல் என்பதால் பலர் இடிபாடுகளுக்குள் சிக்கி தீயில் கருகி 149 பேர் பலியானார்கள். மேலும் 260 பேர் லேசான காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும் பலர் பலியாகி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இது பற்றி பியூனஸ் அயர்ஸ் நகர மேயர் அனிபால் இபாரா கூறுகையில், "தீ விபத்து நடந்ததும் ஒரே புகை மூட்டமாக இருந்ததால் என்ன நடந்தது



என்பது தெரியவில்லை. இடிபாடுகளுக்குள் கிப் பலர் பலியாகியுள்ளனர். தீ விபத்துக்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை. இரவு விடுதியின் மேற்கூரையில் தீப்பிடித்ததாகக் கூறுகிறார்கள். தீயணைப்புத்துறையினர் விசாரித்து வருகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

## 'சுனாமியால்' பாதிப்புற்ற நாடுகளுக்கு அமெரிக்க நிபுணர் குழுக்கள்

(வோஷிங்டன்)

கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு அமெரிக்கா பேரழிவு நிவாரண நிபுணர் குழுக்களை அனுப்பியுள்ளது.

இந்தியா, இந்தோனேசியா, இலங்கை, மலேசியா உட்பட பல நாடுகளில் பூகம்பத்தால் ஏற் பட்ட கடல் கொந்தளிப்பு பெரும் பொருட் சேதத்தையும், உயிர்ச் சேதத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்நாடுகளுக்கு முதற் கட்டமாக அந்தந்த நாட்டு அமெரிக்கத் தூதர்களின் நிவாரண நிதியில் இருந்து தலா ரூ.90 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நாடுகளில் நிவாரணப் பணிகளில் ஈடுபட நிபுணர் குழுக்களையும் அமெரிக்கா அனுப்பியுள்ளது. அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின்பவல் இத்தகவலைத் தெரிவித்தார். முதற் கட்டமாக ரூ.140 கோடி நிதியுதவி அளித்துள்ளது. மேலும் உதவிகள் செய்யப்படும் என்றும் அறிவித்துள்ளது.

## 'சுனாமி' 4000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தை தாக்கியது!

(சென்னை)

'சுனாமி' தாக்கியது இது முதல் முறையல்ல 4000 ஆண்டுகளுக்கு முன்பே தாக்கியிருக்கிறது. அதன் பிறகு 300 ஆண்டுகளுக்கு முன்பும் தாக்கியிருக்கிறது. பின்னர் கி.பி. 2 ஆம் நூற்றாண்டிலும் பூம்புகார் என்ற காவிரிப்பூம் பட்டினத்தைக் கடல் கொள்ளை கொண்டு போயிருக்கிறது.

அந்தக் காலத்தில் சுனாமியை இலக்கியம் 'கடல் கோள்' என்று குறிப்பிடுகிறது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் தென்பகுதி பெரிய நிலப்பரப்பாக இருந்தது. இப்போதைய இலங்கை மாலைதீவு, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா ஆகியவை எல்லாம் ஒன்றாக இணைந்து இருந்த அந்த நிலப்பரப்பை வெளிநாட்டவர் 'லெமூரியா' என்று குறிப்பிடுகின்றனர். தமிழகத்தில் பண்டைய இல்க்கியம் அந்த நிலப்பரப்பை குமரிக் கண்டம் என்று குறிப்பிடுகிறது.

இப்போது இந்தியாவின் வட எல்லையில் உள்ள இமய மலையைப் போல் உயர்ந்த மலை அங்கு இருந்தது. 'குமரிக் கோடு' (கோடு என்றால் மலை என்பது பொருள்) என அந்த மலை அழைக்கப்பட்டது.

அதைப் போல் குமரியாறு ப∴றுளியாறு ஆகியவை கங்கை, யமுனை நதிகளைப் போல் பரந்து விரிந்து நீண்ட தூரம் ஓடின.

அந்த நிலப்பகுதியில் இருந்த தென்மதுரை நகரில்தான் முதல் தமிழ்ச்சங்கம் செயற்பட்டு வந்தது. அந்த நிலப்பகுதி முழுவதையும் கடல் கொள்ளை கொண்டு விழுங்கி விட்டது. அதன் பிறகு மிஞ்சிய தமிழ நாட்டின் தலைநகராக கபாடபுரம் இருந்தது. அதுவும் சில நூறு ஆண்டுகளில் கடலால் விழுங்கப் படடது அதையடுத்து இப்போதைய மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டியர்கள் ஆட்சி புரிந்தனர். அங்கே மூன்றாம் தமிழ்ச் சங்கம் நடைபெற்று வந்தது. தென்தமிழகப் பகுதி கடலால் கொள்ளப்பட்ட தகவல்களை இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் கூறுகிறது.

ப∴றுளியாறும் மிக நீண்ட குமரி மலையும் கொடுமையான கடலால் கொள்ளப்பட்டதை அடுத்து, வடக்குத் திசையில் கங்கையும் இமயமும் உருவானபின் தென் திசையை ஆண்ட மன்னன் என்று பாண்டிய மன்னனைப் பாடுகிறது சிலப்பதிகாரம்.

## சவுதி அரேபிய உள்துறை அமைச்சக அலுவலகம் தீவிரவாதிகளின் கார்க் குண்டுத் தாக்குதலில் சேதம்!

–மற்றொரு தாக்குதலில் 7 தீவிரவாதிகள் பலி

(ரியாத்)

சவுதி அரேபியாவில் உள்துறை அமைச்சக அலுவலகம் அருகே தீவிரவாதிகள் கார்க் குண்டை வெடிக்கச் செய்தனர். இதைத் தொடர்ந்து நடந்த துப்பாக்கிச் சண்டையில் 7 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

பின்லேடன் தாய்நாட்டின் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்று தன் ஆதரவாளர்களைக் கேட்டுக்கொண்ட பின்னர் அந்த நாட்டில் தாக்குதல்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. உள்துறை அமைச்சகக் கட்டடத்துக்குள் தீவிரவாதிகள் அதிரடியாக நுழைய முயன்ற போதே மோதல்கள் இடம் பெற்றன.

இதைத் தொடர்ந்து அமைச்சக கட்டடத்துக்கு அருகே 2 கார்க் குண்டுகளைத் தீவிரவாதிகள் ரிமோட் கண்ட்ரோல் மூலம் வெடிக்கச் செய்தனர். முதல் சம்பவத்தில் 18 பேர் காயம் அடைந்தனர். 2ஆவது கார்க் குண்டு வெடித்ததில் ஒரு கார்ச் சாரதி பலியானார். இந்தக் கார்க் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் அமைச்சகக் கட்டடம் லேசாகச் சேதம் அடைந்தது.

இதன் பிறகு கார்க் குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்பு கொண்ட தீவிரவாதிகள் தங்கி இருந்த ஒரு வீட்டைப் பொலிசார் கண்டு பிடித்தனர். அப்போது வீட்டுக்குள் இருந்த தீவிரவாதிகள் துப்பாக்கியால் பொலிசாரை நோக்கிச் சுடத் தொடங்கினர். இதைத் தொடர்ந்து பொலிசாரின் பதிலடித்தாக்குதலில் 7 தீவிரவாதிகள் பலியானார்கள்.

## சுனாமி தாக்குதலின் எதிரொலி சார்க் மாநாடு பிற்போடப்பட்டுள்ளது

(டாக்கா)


தெற்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பினர் (சார்க்) 3 நாள் மாநாடு பிற்போடப்பட்டுள்ளது.

பங்களாதேசம் டாக்காவில் வருகின்ற 9ஆம் திகதி இந்த மாநாடு தொடங்குவதாக இருந்தது. இந்தக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 3 நாடுகள் (இந்தியா, இலங்கை, மாலைதீவு) சுனாமி தாக்குதலில் பேரழிவைச் சந்தித்துள்ளன. இலங்கையும், மாலைதீவும் நெருக்கடியான நேரத்தில் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாது என்று தெரிவித்தன.

இதனால் மாநாடு மறுதிகதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.



கிளிநொச்சிக்கு நிவாரணப் பொருட்களுடன் வந்துள்ள வாகனத் தொடரணி.





ஒருங்கிணைக்கப்பட்ட நிவாரணப்பணிகளை மேற் கொண்டுவரும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திடம் பல்வேறுபட்ட அமைப்புக்கள் நிவாரணப் பொருட்களைக் கையளிக்கின்றன. (படம்:- சோதி)

# பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்வோர் கடைப்பிடிக்க வேண்டியவை குறித்து அறிவுறுத்து

## - தமிழீழ சுகாதார சேவையினர் நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

**பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்லும் பொதுமக்கள் , தொற்றுநோயில் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்காகக் கையாளவேண்டிய நடைமுறைகள் குறித்து தமிழீழ சுகாதார சேவையினர் அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.**

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணியில் நிற்கும் போராளிகள், தொண்டர் சேவையாளர்கள், பார்வையிட்ச் செல்பவர்கள் மற்றும், அனைவரும் இந்தப் பிரசுரத்தில் குறிப்பிட்டதுபோல செயற்படுமாறும் அவர்கள் வேண்டுதல் விடுத்துள்ளனர்.

அவ்வாறு தமிழீழ சுகாதார சேவையினரால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் கிடைக்கும் பழுதடைந்த எமது மக்களின் உடல்கள், கால்நடைகளின் சடலங்கள் மற்றும் மனித, கால்நடைகளின் மலக் கழிவுகள், பொதுவான கழிவுகள் எல்லாம் ஒன்றாகக் கலந்து மாசடைந்துள்ளதால் தொற்று நோய்க்கிருமிகள் பரவ வாய்ப்புள்ளது. எனவே அப்பகுதிகளில் இருக்கும் கிணறுகளில் உள்ள நீர்,உணவுப் பொருட்களை மனிதப்பாவனைக்கு மறு அறிவித்தல் வரை அல்லது உறுதிப்படுத்தும் வரை பாவிக்க வேண்டாம். அப்பகுதிகளில் கடல்நீர் புகாது இருக்கும் பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களைப் பாவனைக்கு எடுத்து வருதலை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.


பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்பவர்கள் பாதணி அணிந்து செல்லவேண்டும். குடிப்பதற்கும் உணவுப்பாவனைக்கும் பாதுகாப்பான நீரைக் கொண்டு சென்று பயன்படுத்தல் வேண்டும். சவர்க்காரம் போட்டு கைகளைக் கழுவி சாப்பிடுதல் வேண்டும். மீட்புப் பணியில் உள்ளவர்கள் கைகளுக்கு கையுறை அணிந்தும், வாய் மூக்குகளுக்கூடாக நோய்க் கிருமிகள் உட்புகாதவாறு கைக் குட்டை அல்லது முகமூடி(மாஸ்க்) அணிந்தும் இருத்தல் வேண்டும். அத்துடன் சுகாதார, மருத்துவ ஆலோசனைகள், உதவிகள் தேவைப்படும் பட்சத்தில் அந்தப்பகுதிகளில் சிறப்பாக அமைக்கப் பட்டிருக்கும் மருத்துவ நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் எனவும் அந்தத் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (லோ)

# புதிதாகக் கட்டிய பாலம் இடிந்து வீழ்ந்தது முள்ளியவளைப் போக்குவரத்து பாதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பிலிருந்து கேப்பாப்புலவு ஊடாக முள்ளியவளை செல்லும் பிரதான வீதியிலுள்ள புதிய பாலம் ஒன்று உடைந்து விழுந்துள்ளது மேற்படி வீதியில் உள்ள பாலங்கள் அனைத்தும் மிகவும் குறுகிய காலத்தில் அமைக்கப்பட்டவை ஆனால் அதில் ஆச்சரியப்பட வேண்டிய ஒரு விடயம் என்னவெனில்,

மிகவும் குறுகிய காலத்திற்குள் கட்டப்பட்ட மேற்படிப் பாலம் ஒரு



பெரிய நீர்பாயும் பகுதியாகவும் அமையவில்லை. சாதாரணமாக வயல் வெளியில் இருந்து நீரைக் கடத்தும் ஒரு சிறிய பகுதியில் உள்ளது. இந்தப்பாலம் உடைந்திருப்பதால் அப்பகுதிமக்களின் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன. முள்ளியவளை செல்லும் நான்கு சக்கர வாகனங்கள் அனைத்தும் ஒட்டுசுட்டான் சென்று பின்னர் கூழாமுறிப்பு வீதியூடாகவே பயணிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. (கு.ச)

# ரஷ்ய மருத்துவக் குழுவுக்கு வன்னி செல்ல அனுமதி மறுப்பு

வன்னிக்கு மருத்துவ உதவிகளை வழங்குவதற்காகச் சென்ற ரஷ்ய மருத்துவக் குழுவினர் வவுனியாவிலிருந்து திருமலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.வன்னியில் பாதுகாப்பு பிரச்சினை உள்ளதாகக் கூறியே இவர்கள் திருமலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். கொழும்பிலிருந்து கடந்த புதன்கிழமை வவுனியா சென்ற 16 பேர் கொண்ட மருத்துவக் குழுவினரே வவுனியா வந்து, பின்னர் திருமலைக்குச் சென்றுள்ளதாக வவுனியா சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# திருமலையில் கடற்கொந்தளிப்பில் பாதிக்கப்பட்ட மூவின மக்களுக்கும் தமிழர் பு.கழகம் உதவி

(அலுவலக செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டத்தில் கடற்பூகம்பத்தால் பாதிக்கப்பட்டு அழிவுற்றுள்ள குச்சவெளிப் பிரதேசத்தில் மூவின மக்களுக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் உடனடி மனிதாபிமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பிரதேசத்தில் 610 முஸ்லிம் குடும்பங்களும், 200 சிங்களக் குடும்பங்களும்,198 தமிழ் குடும்பங்களும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளன. இவர்களுக்கான மருத்துவம், உடுபுடவை, பால்மா, உணவு போன்ற உடனடி மனிதாபிமானச் செயற்பாடுகளும், இன, மத வேறுபாடின்றி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ் இயற்கையின் அனர்த்தத்தினால் வீதிகள் பாழடைந்துள்ளதினால் மக்கள் போக்குவரத்துக்கு சிரமப்படுவதனைக் கருத்திற் கொண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அவ் வீதிகளைச் சீர் செய்வதற்காக செயற்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், மக்களின் உடனடித் தேவைகளுக்காக பால்மா, மருத்துவம், உலர்உணவு போன்ற பொருட்கள் திருகோணமலை மாவட்ட கோமரக்கடவை சிங்களப் பிரதேச செயலரிடம் தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டப்பணிப்பாளர் லோரன்ஸ் கிறிஸ்டி அவர்களினால் கையளிக்கப்பட்டது. அக் கிராமத்தில், நான்கு முகாம்களில் 500 குடும்பங்கள் தங்கியுள்ளன. இவர்களுக்கான மேலதிக உதவிகள் செய்வதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

# அவசர வேண்டுகோள்

மாவட்ட வைத்தியசாலை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் கடமையாற்றுகின்ற சகல உத்தியோகத்தர்கள், ஊழியர்களை உடன்கடமைக்கு சமுகமளிக்குமாறு வைத்திய அதிகாரி தர்மேந்திரா கேட்டுள்ளார். (08)

# திருமலையில் பாதிக்கப்பட்ட மக்களை சொர்ணம், எழிலன் நேரில் சென்று பார்வையிட்டனர்

திருகோணமலையில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு பல நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களை விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட தளபதி கேணல் சொர்ணம், திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன்,திருகோணமலை மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் ஐங்கரன் ஆகியோர் நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டுள்ளனர்.

அவர்கள் கடற் கொந்தளிப்பால் மோசமாகப் பாதிப்படைந்த குச்சவெளி, நிலாவெளி, வேலூர் போன்ற கிராமங்களையும் பார்வையிட்டதோடு கேணல் சொர்ணம் அவர்கள் இறந்தவர்களிற்கும், இடம் பெயர்ந்து நலன்புரிநிலையங்களில் வாழ்பவர்களுக்கும் தனது அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார்.



நிவாரணம் தொடர்பாக சமாதானச் செயலகத்தில் சு.ப.தமிழ்செல்வன் அவர்களுடன் மலையக முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் குழுவினர் சமாதானச் செயலகத்தில் கலந்துரையாடல். (படம்:- சோதி)



முள்ளியவளை செயலணிக்குழுவிடம் நிவாரணப் பொருட்கள் கையளிக்கப்படுவதை படத்தில் காணலாம்.



முல்லை நகரில் தொடர்ந்து மீட்புப் பணியிலீடுபட்டுள்ள புலிகள்.

(படங்கள்:- குகன்)

# கடல் கொந்தளிப்பையடுத்து மிதிவெடிகள் கடலில் மிதப்பதான தகவலுக்கு மறுப்பு!

-விசேட பணிமனையொன்று திறக்கப்பட்டதாகவும் தகவல்-

(வடமராட்சி)

**கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட வடமராட்சியின் பருத்தித்துறை, கற்கோவளம் மற்றும் முனை,வடமராட்சி கிழக்கில் மணற்காடு பகுதிகளில் கடல் கொந்தளிப்பையடுத்து மிதி வெடிகள் மிதந்து வருவதாக வெளிவந்த செய்திகளை யாழ்.மாவட்ட கண்ணிவெடியகற்றல் ஒருங்கிணைப்பு அலுவலக ஆலோசகர் ரிம் கோணர் மறுதலித்துள்ளார்.**

யாழ் செயலகத்தில் இயங்கும் கண்ணிவெடியகற்றல் ஒருங்கிணைப்பு அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை நடாத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இம் மறுப்பை அவர் வெளி யிட்டார். அவருடன் அலுவலக இணைப்பதிகாரி எல்.மோ ஆனந்த ராஜாவும் இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார்.

ரிம்கோணர் மற்றொரு கேள்வி ஒன்றிக்குப் பதிலளிக்கையில் "மிதிவெடிகள் மிதப்பதாக கூறப்பட்ட பகுதிகளில் எமது அணிகள் முழுமையாகத் தேடுதல்களை நடாத்தியுள்ளன. எனினும் புதிய இரு எறிகணைகளையும் வெடிக்கும் தகவற்ற இரு மிதிவெடிகளையும் மட்டுமே எமது அணிகள் மீட்டுள்ளன. எனினும் கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கண்ணிவெடி அபாயத்தினை கருத்தில் கொண்டு அப்பகுதியில் விசேட பணிமனையொன்று திறக்கப்பட்டுள்ளது. வெடி பொருட்கள் தொடர்பான முறைப்பாடுகளை அங்கு செய்யமுடியும்"என்றார்.

இதனிடையே கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட கரையோரப்பகுதிகளில் புதிதாக காவலரண்களை அமைத்து வரும் படையினர், மீண்டும் மிதிவெடிகளைப் புதைக்காது தடுக்கமுடியுமா? என எழுப்பப்பட்ட கேள்வியொன்றிற்கு பதிலளித்த அவர், தாம் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் விதிமுறைகளிற்கு உட்பட்டே பணியாற்றுவதாகவும், அவ்வாறு படைத்தரப்பு மிதிவெடிகளை புதைக்குமாயின் அது தொடர்பாக உரிய தரப்புகளிடம் தான் முறையிடத் தயாராகவும் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வடமராட்சி கிழக்குப்பகுதியில் கண்ணிவெடியகற்றும் பணியில் மேலும் சர்வதேச கண்ணிவெடியகற்றும் தொண்டரமைப்புகளை சேவையில் ஈடுபடுத்துவதா? என்பது பற்றி அங்கு நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்ட பின்னரே தீர்மானிக்க முடியுமென மற்றோர் கேள்விக்கு பதிலளிக் கையில் கருத்துத் தெரிவித்தார். (27)

## மட்டு.இல் வெடிபொருட்கள் குறித்து த.புனர்வாழ்வுக்கழகம் அறிவுறுத்தல்

மட்டக்களப்பில் இராணுவ முகாம்கள் அமைந்திருந்த பகுதி களில் அவதானமாக நடந்து கொள்ளுமாறு தமிழர்புனர்வாழ் வுக்கழகம் வேண்டுகோள் விடுத் துள்ளது. இங்குள்ள வெடிப்பொருட்கள் கடற் கொந்தளிப்பை அடுத்துப் பரவலாகக் காணப்படுவதால் அவற்றினால் பாதிப்புகள் ஏற்படக்கூடுமென அச்சம் வெளியிட்டப்பட்டுள்ளது. (32)

-பாதிப்புற்றோருக்கு உதவ-

## யாழ்.மாநகரசபை ஊழியர்கள் ஒருநாள் சம்பளம் வழங்கல்

வடக்கு கிழக்கு மாகாணத்தைத் தாக்கிய "சுனாமி" கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்ப்பாணம் மாநகரசபை தனது நிவாரணப்பணிகளைச் செய்கின்றது.

மாநகரசபை ஊழியர்கள் அனைவரும் தங்களது ஒருநாள் சம்பளத்தை இந்த நிவாரணத்திற்காக வழங்கியுள்ளனர். அவற்றைவிட, யாழ்ப்பாண மாநகரசபையில் இயங்குகின்ற தொழிற்சங்கங்களான பிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கம், வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்க பொது (சிற்) ஊழியர் சங்கம், வடக்கு-கிழக்கு மாகாண ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கம் என்பனவற்றோடு, யாழ்.மாநகரசபை நலன்புரிச் சங்கம், யாழ்.மாநகரசபை சுகாதாரப் பகுதி நலன்புரிச்சங்கம், யாழ்.மாநகரசபை சைவசமய விவகாரக்குழு என்பனவும் இணைந்து இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான உலர்உணவுப் பொருட்களை, பருத்தித்துறை, கரவெட்டி, செம்பியன்பற்று ஆகிய பகுதிகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்த உலர் உணவில் அரிசி, சீனி, பருப்பு, பால்மா வகைகள், பிஸ்கற்றுக்கள் என்பன அடங்கியுள்ளன. அத்துடன் பளை, கரவெட்டி ஆகிய பகுதிகளுக்கும் மாநகர சபை இரண்டு தண்ணீர் பௌசர்களையும் சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

## சட்டவிரோத மண் அகழ்வை தடுக்க கடும் நடவடிக்கை

கோயிலாக்கண்டி- தச்சன் தோப்பு பகுதிகளில் வகை தொகை இன்றி இடம் பெற்று வரும் சட்ட விரோத மண் அகழ்வில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக இப்பிரதேச மக்கள் முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மண் கடத்தலில் ஈடுபடுவோருக்கு எமது வளங்கள் பாதிக்கப்படுவதுடன்,நன்னீர் உவர்நீராக மாறிவரும் நிலைமைகள் குறித்தும் எடுத்துக் கூறியும் இவை பற்றி இவர்கள் கவனத்தில் எடுக்காது செயற்பட்டு வருவதால் இச்சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபடும் நபர்கள், மற்றும் வாகனங்களுக்கு, இழப்புக்கள் ஏற்படும் பட்சத்தில் இது குறித்து தாம் ஒன்றும் செய்ய முடியாதென இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். கடந்த சில வாரங்களுக்கு முன்னால் தொடர்ந்து பல மாதங்களாக மண் கடத்தலில் ஈடுபட்ட கன்ரர் வாகனம் ஒன்று இனம் தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டதுடன் இதில் வந்தவர்களும் இனம் தெரியாதோரால் கடுமையாகத் தாக்கப்பட் டுள்ளதாகத் தெரியவருகிறது. (28)

## யாழ்.குடாநாட்டில் கடல் அனர்த்தத்தால் சுமார் 2 இலட்சம் பேர் இடம் பெயர்வு

-அரச செயலக தகவல் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களைத் தாக்கிய கடல் அனர்த்தங்கள் காரணமாக சுமார் 2இலட்சம் பேர்வரை இடம்பெயர்ந்திருப்பதாக யாழ்.அரச செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு இடம் பெயர்ந்தோரில் 13652 குடும்பங்களைச் சேர்ந்த 48729 பேர் பாடசாலைகள், மற்றும் ஆலயங்கள், பொது இடங்கள் என்பவற்றில் தங்கியுள்ளனர். ஏனையோர் உயர்வான பிரதேசங்களிலுள்ள நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் [illegible] புள ளனர். என யாழ். அரச[illegible]திபர் தெரிவித்தார். (33)

## திட்டமிட்டபடி நேர்முகத்தேர்வு

(அலுவலக செய்தியாளர்)

2005 ஆம் ஆண்டு புதிய கணினி டிப்ளோமா ஆங்கிலம் (Diploma in English) ஆகிய கற்கை நெறிகளுக்கான மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத்தேர்வும் தெரிவுப்பரீட்சையும் ஏற்கனவே அறிவித்ததின் பிரகாரம் 03/01/2005, 04/01/2005 ஆகிய தினங்களில் கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. அத்தினங்களில் சமுகமளிக்க முடியாத விண்ணப்பதாரிகள் 10/01/2005, 11/01/2005, 15/01/2005, 16/01/2005 ஆகிய தினங்களில் சமுகமளிக்குமாறு தொழில் நுட்பக்கல்வி நிறுவன அதிபர் க.சோதி முருகேசு தெரிவித்துள்ளார். (சோ)

## கடல் கொந்தளிப்பால் பாதிப்புற்றுள்ள மாணவர்களின் கல்வித் தேவைக்கு உதவுக

-தமிழ் மாணவர் ஒன்றியம் வேண்டுகை

(யாழ்ப்பாணம்)

"சுனாமி" பேரலையினால் பாதிக்கப்பட்டு கல்வி உடைமைகளை இழந்துள்ள மாணவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவ முன்வருமாறு தமிழ் மாணவர் ஒன்றியம் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளது.

எவரும் எதிர்பாராதவிதமாக சுனாமி கடற்பேரலை தமிழர் தாயகப் பகுதியின் கரையோரப் பிரதேசங்களைத் தாக்கியது. இத்தாக்கத்தையடுத்து கரையோரப் பிரதேசவாழ் மாண வர்கள் பலர் தம் கல்வி உடைமைகளை கடல் அலையிடம் பறிகொடுத்து ஏதிலிகளாக அகதிமுகாம்களில் தங்கியுள்ளனர்.

இவ்வாறான மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கான கற்றல் உபகரண வசதிகள், பாடப்புத்தகங்கள், கொப்பிகள்,எழுதுகருவிகள் என்பவற்றை வழங்கமுன்வருமாறு உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ள தமிழ் மாணவர் ஒன்றியம்,

உதவிகளை வழங்கவிரும்புவோர் தமிழ் மாணவர் ஒன்றியத்தினரிடம் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளது.. (33)

## கடந்த ஆண்டில் இந்தியாவிலிருந்து 882 பேர் தாயகம் திரும்பினர்

கடந்த ஆண்டில் இந்தியாவில் இருந்து 237 குடும்பங்களைச் சேர்ந்த 882 பேர் தாயகம் திரும்பியுள்ளனர்.

கடந்த ஆண்டில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 44 குடும்பங்களைச் சேர்ந்த 162 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 30 குடும்பங்களைச் சேர்ந்த 115 பேரும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 08 குடும்பங்களைச் சேர்ந்த 24 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 94 குடும்பங்களைச் சேர்ந்த 341 பேரும், யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 59 குடும்பங்களைச் சேர்ந்த 232 பேரும், ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த 02 குடும்பங்களைச் சேர்ந்த 08 பேருமாக 237 குடும்பங்களைச் சேர்ந்த 882 பேரே தாயகம் திரும்பியுள்ளனர். (10)

## போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோருக்கு உதவி

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நிரம்பி வழிகின்ற கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொது மக்கள் பல்வேறு உதவிகளையும் வழங்கி வருகின்றார்கள். வைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட்ட பலரும் உடுக்க உடை கூட அற்ற நிலையிலேயே கொண்டுவந்து அனுமதிக்கப்பட்டனர். இவர்களுக்குப் பலரும் உடு புடவைகளைக் கொடுத்து வருவதுடன் உணவுப் பொருட் களையும் வழங்கிவருகின்றனர் (41)

## வர்த்தக நிலையம் நள்ளிரவு உடைத்து பொருட்கள் திருட்டு

மிருசுவில் மருத்துவமனைக்கு அருகே இருந்த வர்த்தக நிலையம் ஒன்று நேற்று முன்தினம் நள்ளிரவில் உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.வர்த்தக நிலையத்தின் பின்பக்கக் கதவைத் தெண்டித்திறந்த கொள்ளையர்கள் ரூபாய் 01 இலட்சம் மதிப்புடைய பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றிருப்பதாகத் தெரியவருகிறது.

சமீபகாலமாக கொடிகாமம்பிரதேசத்தில் 15இற்கும் மேற்பட்ட இடங்களில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று இருப்பதுடன் இதுவரை இச்சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் ஒருவர் கூட சிறிலங்காப் பொலிசாரால் கைது செய்யப்படாமை குறித்து. இப்பிரதேச பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் தமது விசனத்தைத் தெரிவிக்கின்றனர். (28)

## இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண நிதியில் 3.3 மில்லியன் ரூபாயை வழங்க அரசு மறுப்பு!

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்டத்தில் உள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரண நிதியில் 3.3மில்லியன் ரூபாயை வழங்க அரசாங்கம் மறுத்துள்ளதாக வவுனியா அரச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள பூந்தோட்டம், சிதம்பரபுரம், நெளுக்குளம், அடப்பன்குளம், ஆகிய நலன்புரி நிலையங்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு நவம்பர் மாதத்திலேயே செப்ரெம்பர் மாதத்திற்கான நிவாரணப் பொருட்கள் வழங்குவதற்கான நிதி அரசினால் அனுப்பி வைக்கப்பட்டது. இதற்கு 10.8மில்லியன் ரூபா எமக்குத் தேவையாக இருந்தபோதும் அரசு 7.5மில்லியன் ரூபாவையே அனுப்பி வைத்தது. டிசெம்பர் மாத இறுதிவரை ஒக்டோபர், நவம்பர்,டிசெம்பர்,மாதங்களுக்கான நிவாரண நிதியை வழங்காமல் அரசு இழுத்தடித்து வருகின்றது. இதனால் நிவாரணப் பொருட்களை வழங்க முடியாது உள்ளது என்றார். (10)

# விடைபெறும் 2004 ஆம் ஆண்டில்...

## இலங்கை



### சனவரி

01:காந்தரூபன் அறிவுச்சோலை, செஞ்சோலை சிறார்களின் புத்தாண்டு தின நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவா மேதகு வே.பிரபாகரன் கலந்துகொண்டார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் அபிவிருத்தி செயலகம் செயற்பட ஆரம்பித்தது.

05.அமெரிக்கக் கடற்படையின் கரையோரப்பாதுகாப்புப் படையின் "கரேகஜஸ்" கப்பலை சிறிலங்கா கடற்படைக்கு வழங்குவது தொடர்பான விடயங்களை ஆராய்வதற்காக அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் குழு கொழும்பு வருகை.

06:நோர்வே வெளிவிவகார அதிகாரிகளுடன் ஒஸ்லோவில் இளம்பரிதி சந்திப்பு.


09:பாதாள உலகக்குழு தலைவர் தம்மிக்கஅமரசிங்க சுட்டுக்கொலை.

10:தேசியத்தலைவரினால் கலை பண்பாட்டுக்கழக மகளிர் பிரிவினர் கௌரவிப்பு.

கேணல் கிட்டு நினைவுக்கேடய உதைபந்தாட்டப்போட்டி ஆரம்பம்.



11:சோதியா படையணியின் ஆண்டு நிகழ்வில் தேசியத்தலைவர் பங்கேற்பு.



12:அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினரும், சுவீடன் தூதரக் அதிகாரி ஆன்வேரி வலேனியல் தலைமையிலான குழுவினரும் சந்தித்து புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக் கால தன்னாட்சி அதிகாரசபை குறித்தும் சமாதான முயற்சிகளின் நிலைமை குறித்தும் கலந்துரையாடல்.

13: "நாட்டைப் பிரிக்கமுடியாது. விரும்பினால் தமிழர்களும், முஸ்லிம்களும் சிங்கள ஆட்சியின் கீழ் வாழட்டும்" என்ற கோஷத்துடன் தேசப்பற்று தேசிய முன்னணி திருமலையில் நடத்திய பேரணியில் 10 ஆயிரம் பேர் பங்கேற்பு.

14.அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்-நோர்வே சிறப்புத்தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் லண்டனில் சந்திப்பு.

16:கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகள் நினைவு நிகழ்வுகள் தேசியத்தலைவர் அவர்கள் சுடரேற்றி அஞ்சலி "வரும் பகை திரும்பும்'' இசைத் தட்டை கேணல் பானு வெளியிட்டு வைக்க, தேசியத் தலைவர் பெற்றுக் கொண்டார். நாட்டிய் நாடகத்தை உருவாக்கிய புதுவை அன்பன் அவர்கள் தேசியத்தலைவரினால் கௌரவிக்கப்பட்டார்.



நோர்வே அரசால் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராக மீண்டும் ரொண்ட் புறூஹொவ்டே நியமனம்.

17:பொங்குதமிழ் 3 ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் உணர்ச்சி பூர்வமாகக் கொண்டாட்டம்.

19:அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சர்வதேச நாடுகள் அமைப்புக்களின் 30 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் புலி களின் திட்டமிடல் செயலகத்தில் சந்தித்து வட-கிழக்கு அபிவிருத்திப் பணிகள் குறித்துக் கலந்துரையாடல்.



20:சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் இணைந்து "ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி" என்ற புதிய கூட்டணியை அமைப்பதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்து.

22:ஜப்பானிய தூதுவர் யசூசி அகாஷியைச் அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்தித்தபோது தென்னிலங்கை அரசியற் சூழ்நிலை எம்மக்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதென தெரிவிப்பு.



23: அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ் ஊடகவியலாளர்களுடன் சந்திப்பு.

அரசியல் துறைப்பொறுப்பாளரும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனும் சிறுபான்மை மக்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கு எப்படிப் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும் என்பது பற்றி ஆராய்வு.

ஜப்பான் தூதுவர் -சனாதிபதி சந்திரிகா சந்திப்பு.

25: தமிழீழ சட்டக்கல்லூரி பட்டமளிப்பு விழாவில் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியதுடன் பட்டங்களையும் வழங்கல்.



27:அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையிலான விடுதலைப்புலிகள் குழுவினர் பல ஐரோப்பிய நாடுகளுக்கான பயணமொன்றை மேற்கொண்டு கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டனர்.

29: ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியின் முதலாவது பொதுக் கூட்டம் கொழும்பு மாநகரசபை மைதானத்தில் நிகழ்வு.

30: நோர்வேயில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் உட்பட உயர் மட்டத்தினரிடம் வட-கிழக்கிற்கான மனிதாபிமான உதவிகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென அரசியல்துறைப் பொறுப்பாளர் வலியுறுத்தல்.



சிறிலங்கா படையினருக்கான பயிற்சிகளையும் படைக்கல உதவிகளையும் வழங்கும் "இராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு" உடன்பாட்டில் சிறிலங்காவும் ரஷ்யாவும் கைச்சாத்து.

31: அரசியல் துறைப்பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் நோபல் பரிசுக்குழுத்தலைவரும் ரொம்சோ பல்கலைக்கழக பேராசிரியருமான ஒலி.டி.எம். ஜோசெயுடன் சந்திப்பு. மாலை நோர்வே மீன்பிடி விஞ்ஞானக் கல்லூரி பேராசிரியர்கள், விரிவுரையாளர்களைச் சந்தித்து தென்பகுதி அரசியல் பிரச்சினைகள் தொடர்பாகவும், வடக்குக் கிழக்கில் உள்ள கடற்றொழிலாளர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடல்.

### பெப்ரவரி

01: அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சங்கீதப்போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்ற முள்ளியவளை நுண்கலைக் கல்லூரி மாணவி செல்வி.மகேந்திரம் மயிலாசினி அவர்களுக்கு தமிழீழத் தேசியத்தலைவரின் கையெழுத்துப் பொறிக்கப்பட்ட சான்றிதழ், பணப்பரிசு என்பன அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் வழங்கல்.



03.ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாஷி அமெரிக்கப்பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சட் ஆர்மிரேஜ்ஜை சந்தித்து இலங்கையின் தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் குறித்துக் கலந்துரையாடல.

04:மகரகமவில் தேசப்பற்று தேசிய முன்னணியின் முதலாவது கட்டம்.

05:ஜேர்மன் பேர்ளினில் ஜேர்மன் பொருளாதார ஒத்துழைப்பு இராஜாங்க செயலர் ஜேர்மனியின் வெளிவிவகார பிரதிசெயலர் ஆகியோரை அரசியல் துறைப்பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் சந்தித்து இலங்கையில் நடைபெறும் சமாதான நடவடிக்கைகள் குறித்து ஆராய்வு.

06:போ.நி.க.குழுவின் புதிய தலைவர் ரொண்ட்புறூவ் ஹொவ்டே பிரதமர் ரணிலைச் சந்தித்துப் போர் நிறுத்த உடன்பாட்டின் தற்போதைய நிலை குறித்து ஆராய்வு.

ஐ.ம.சு.மு கட்சியாகவும், வண்ணத்துப் பூச்சி அதன் சின்னமாகவும் அங்கீகாரம்.

அரசியல்துறைப்பொறுப்பாளரைச் சந்தித்த ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினரான ஜோன்வோல்ஸ் குஸ்னர்கான் இலங்கையின் வடகிழக்குப் பகுதியின் அபிவிருத்திக்கான அவசர உதவிகளை வழங்கும் திட்டத்தில் தொடர்ந்து எல்லையற்ற ஆதரவு வழங்கப்படுமென உறுதி வழங்கல்.

07:பாராளுமன்றம் நள்ளிரவு கலைக்கப்பட்டதாகவும், வேட்புமனுத் தேர்தல் ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறும் எனவும் அறிவிப்பு.

09:போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரொண்ட்புறூவ் ஹொவ்டே திருமலைக்கு விஜயம் செய்து இராணுவ பொலிஸ் அதிகாரிகளுடனும், திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திலக்குடனும் சந்திப்பு.

அரசியல் துறைப்பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் நெதர்லாந்து அரசின் வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடல்.



10:அரசியல்துறைப்பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் சுவீடன் வெளிவிவகார அமைச்சின் இராஜதந்திரிகளைச் சந்தித்துப் போரினால் பாதிக்கப்பட்ட வட-கிழக்கு மக்களின் அவசர மனிதாபிமானத் தேவைகள் குறித்தும் இவற்றுக்கான சர்வதேச உதவிகள் குறித்தும் கலந்துரையாடல்.

11:போ.நி.க குழுத்தலைவர் ஹொவ்டே சனாதிபதி சந்திரிகாவுடன் சந்திப்பு.

12:சுவிற்சர்லாந்து நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 15 பேர் கொண்ட குழுவினர் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் உட்பட்ட பல தரப்பினரையும் சந்தித்து அன்றைய அரசியல் சூழ்நிலை, மக்க்ள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வு..

13:அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து முன்னாள் இத்தாலியப் பிரதமர் செனற்றர்பையே நிலா புரோவீர உள்ளிட்ட குழுவினர் வட-கிழக்கு மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் சாதகமான முறையில் பரிசீலிக்கப்படுமென உறுதியளிப்பு.



# விடைபெறும் 2004 ஆம் ஆண்டில்...

16:யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கயல்விழி மற்றும் இமயவன் ஆகியோர் போ.நி.க குழுத்தலைவர் ஹொவ்டேயைச் சந்தித்து யாழ். மாவட்டத்தில் பல்வேறு கொலை, கொள்ளை மற்றும் ஆட்கடத்தல் சம்பவங்கள் இடம் பெறுவதால் அவற்றைக் கட்டுப்படுத்தப் பொலிசார் மிகுந்த கரிசனையுடன் செயற்பட வேண்டுமென வலியுறுத்து.

17:தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் மற்றும் யாழ். திருமலை, வவுனியா, மன்னார் அரசியல்துறைப் பொறுப்பாளர்களும் இரா.சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பின் 4 கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற அங்கத்தவர்களும் மற்றும் கட்சிச் செயலாளர்களும் சந்தித்து விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தின் கரிசனைகள் சம்பந்தமாகவும், தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் முன்னெடுப்புக்கள் சம்பந்தமாகவும், கலந்துரையாடல்.



18:அரசியல் துறைப் பொறுப்பாளர் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனுடன் தமிழ் மக்களுடைய அரசியல் பலத்தினை ஒன்று திரட்டுவது குறித்து ஆலோசன்ன.

20:தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிவேக உந்துருளி சிறப்பு அணியின் பயிற்சி நிறைவில் தேசியத் தலைவர் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் சாகச நிகழ்வுகளையும் பார்வையிட்டார்.



23: 13ஆவது பொதுத்தேர்தலுக்கு வேட்பு மனுத்தாக்கல்.

புனரமைக்கப்பட்ட யாழ். பொது நூலகம் மாணவர் பாவனைக்கு திறப்பு.

25:அரசியல்துறைப் பொறுப்பாளர், துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் தங்கன், யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோரை கூட்டமைப்பைச் சேர்ந்த சம்பந்தன், மாவைசேனாதிராசா, கஜேந்திரகுமார், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் சந்தித்து தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து ஆராய்வு.


27:தமிழீழத் தேசியப் பெருவிளையாட்டு விழா நிறைவு.



28:கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொனண்ட்புறூவ் ஹொவ்டேயை சந்தித்த அரசியல்துறைப் பொறுப்பாளர் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழும் மக்கள் வாக்களிப்பது தொடர்பான சில பிரேரணைகளை முன்வைப்பு.

## மார்ச்

03: தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையை தமிழ் மக்களின் தேசியத் தலைமையாகவும், புலிகளை தமிழ் மக்களின் உண்மையான ஏக பிரதிநிதிகளாகவும் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டது.



2: தர்மராஜ்ய முறை உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் ஜாதிகஹெல உறுமயவின் தேர்தல் விஞ்ஞாபனம் தலதா மாளிகையில் வைத்து வெளியிடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட கல்விச் சமூகம் அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டு வருவதைக் கண்டித்து 50 ஆயிரத்திற்கு அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டு 60 கி.மீ நீளமான மனித சங்கிலிப் போராட்டம்.

5: வெலிக்கடைச்சிறைக் கைதிகளில் இரண்டு குழுக்களுக்கிடையே இடம் பெற்ற மோதலில் 20இற்கும் அதிகமானோர் படுகாயம்.

6: மட்டு- அம்பாறை விசேட தளபதியாக ரமேஸ், தளபதியாக ராம், துணைத்தளபதியாக பிரபா, அரசியல் துறைப் பொறுப் பாளராக கௌசல்யன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர் என்றும் புலிகள் அமைப்பில் இருந்து கருணா நீக்கப்பட்டதாகவும் விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் அறிவிப்பு.



8: மட்டு-திருமலை ஆயர் கிங்சிலி சுவாம்பிள்ளை தலைமையிலான குழுவினர் அரசியல்துறைப் பொறுப்பாளர் மட்டு-அம்பாறை மாவட்டத் தளபதிகள் உள்ளிட்டோரை சந்தித்து மட்டக்களப்பு மாவட்ட நிலைமை குறித்து ஆராய்வு.

சர்வதேச மகளிர் தினம் தொடர்பான நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.




9: வன்முறைகள், குழப்பங்களற்ற வகையில் தேர்தலை நடத்துவது, கிழக்கு நிலவரம் வட-கிழக்குப் பகுதிகளில் ஏற்படுத்துகின்ற அபிவிருத்தி தொடர்பாகவும், பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீபன் இவன்ஸ் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் கலந்துரையாடல்.

16: ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்புக்குழுவினர் மட்டக்களப்பிற்குச் சென்று தேர்தல் தொடர்பாக கூட்டமைப்பு முதன்மை வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கத்தைச் சந்தித்து கலந்துரையாடல்.

19: தமிழீழம் எங்கும் அன்னைபூபதி நினைவுநாள் உணர்வெழுச்சியுடன் ஆரம்பம்.



20: அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்த இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் ஜான்டுவேல்கென், பேராசிரியர் ஜோர் ஜீ.ஈ பிரேக், கலாநிதி சிறில்வான் புரோக் ஆகியோர் சமகால அரசியல் விடயங்கள் பொதுத் தேர்தல் கிழக்கில் ஏற்பட்ட நிலை தொடர்பாக கலந்துரையாடல்.



21: மூதூர் கிழக்கு சம்பூரில் உள்ள புலிகளின் அரசியல் துறை அலுவலகத்தில் வைத்து திருகோணமலை யுனிசெப் பிரதிநிதிகளிடம் 35 சிறுவர்கள் ஒப்படைப்பு.

கிளி.மருத்துவமனையில் யுத்தகால அழிவை நினைவு கூர்ந்து அமைக்கப்பட்ட தூபி திறப்பு.



24: வடமராட்சி கடற்பரப்பினுள் அதிகாலையில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் அங்கு தொழிலில் ஈடுபட்டிருந்த வடமராட்சி மீனவர்கள் மீது காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதல் நடத்தினர் இதனால் 3 இலட்சத்திற்கும் அதிகமான சொத்துக்கள் இழப்பு.

26:வாகனக் கண்ணிவெடியில் சிக்கி கிளிநொச்சி பரந்தனில் உழவு இயந்திரப்பெட்டி சேதம் சம்பவத்தில் மூவருக்குப் படுகாயம்.

27: மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அதிகாரியுமான தி.மோனகுருசாமி இனம் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிப்படுகாயம்

## ஏப்பிரல்

01:தேர்தலை முன்னிட்டு புளியங்குளம்-முகமாலைப்பகுதியில் மக்கள் திரண்டனர்.



02:நாடெங்கும் தேர்தல் வாக்களிப்பு.

05:ஜெனிவாவில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வையொட்டி நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மட்டு-அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மூத்தஉறுப்பினர் கரிகாலன், ஆலோசகர் ருத்திரகுமாரன், யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் சிதம்பரநாதன் சுவிஸ்வாழ் தமிழ் அமைப்பின் செயலர் அன்ரன் பொன்ராஜ் பங்கேற்பு.

தமிழ்மக்களின் நிலைப்பாட்டை வலியுறுத்தி ஜெனிவாவில் ஐ.நா. சபையை நோக்கி பல்லாயிரம் தமிழர்கள் கலந்துகொண்ட பொங்குதமிழ் எழுச்சிப் பேரணி.



06:தமிழரசுக்கட்சி சின்னத்தில் போட்டியிட்ட தமிழ் கூட்டமைப்பைச் சேர்ந்த 20 பாராளுமன்ற உறுப்பினர்களில் பாராளுமன்றக் குழுத்தலைவராக இரா. சம்பந்தனும், உபதலைவராக மாவை சேனாதிராசாவும், பிரதமகொரடாவாக செல்வம் அடைக்கலநாதனும் தெரிவு செய்யப்பட்டதுடன் தமிழ்த்தேசியத்தை வலியுறுத்தி தமது அரசியல் நடவடிக்கைகளை அமைத்துக்கொள்வது எனத் தீர்மானம்.

சிறிலங்கா பாராளுமன்றத்தில் 13 ஆவது பாராளுமன்றத்தின் 18 ஆவது பிரதமராக மகிந்த ராஜபக்ஷ சனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம்.



09:மட்டு-அம்பாறை மக்களையும், போராளிகளையும் கருணாவின் பிடியிலிருந்து மீட்டெடுப்பதற்கான நடவடிக்கையினை விடுதலைப்புலிகள் ஆரம்பித்தனர்.



10:ஐ.ம.சு கூட்டமைப்பு அரசின் 31 அமைச்சர்களும், 31 பிரதிஅமைச்சர்களும் சனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம்.

11:அனலைதீவில் நிலை கொண்டுள்ள ஈ.பி.டி.பி தேசவிரோதக் கும்பலின் முகாம் அப்பகுதி மக்களால் தீயிட்டு எரிப்பு.

12:மட்டு-அம்பாறை பகுதிகளைக் கருணா குழுவிடமிருந்து மீட்பதற்காக விடுதலைப்புலிகளின் படையணிகள் மேற்கொண்டு வந்த நடவடிக்கையைத் தொடர்ந்து கருணா தனது நெருங்கிய சகாக்களுடன் தப்பி ஓட்டம்.

# விடைபெறும் 2004 ஆம் ஆண்டில்...

13:மட்டு-அம்பாறை தளபதி ராம், மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராசா, சமாதான செயலக பிரதி இயக்குநர் பவானந்தன் ஆகியோர் முன்னிலையில் மட்டு-அம்பாறைப் பிரதேசத்தில் மீட்பு அணியுடன் இணைந்துகொண்ட 269 போராளிகள் பெற்றோரிடம் ஒப்படைப்பு.

15:இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவர் ரொண்ட் புறுாவ் ஹொவ்டே தலைமையில் மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேச செயலக மண்டபத்தில் மட்டு-அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஸ், மட்டு அம்பாறை தளபதி ராம், மட்டு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், சமாதான செயலக பிரதிச்செயலாளர் பவானந்தன், தளபதிகளான நாகேஷ், ரமணன், ஜெயார்த்தனன் மின்னேரியாவில் உள்ள 23 ஆவது படைப்பிரிவு பிரிகேடியர் வயிரவிஜயகுணவர்த்தன மட்டக்களப்பு 233 ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரி கேணல் லக்கிசிறி அமரதுங்க ஆகியோர் சந்தித்து மட்டுமாவட்டத்தில் புலிகள்-இராணுவத்தினர் புரிந்துணர்வு அடிப்படையில் செயலாற்றுவது என்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இரு தரப்பும் மதித்து செயற்படுவது என்றும் முடிவு.

16:துரோகி கருணாவின் பிடியில் இருந்து மட்டு-அம்பாறை மாவட்டம் தமிழீழ விடுதலைப் புலிகளால் இரத்தம் சிந்தாது மீட்கப்பட்டதையடுத்து தேசியத் தலைவரின் பணிப்பின் பேரில் மூத்த தளபதிகளான கேணல் பானு, கேணல் சொர்ணம் ஆகியோர் மட்டக்களப்பிற்கு விஜயம்.

இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையேயான உறவுகளைப் பலப்படுத்தும் நோக்கத்திற்காக இந்திய யுத்தக்கப்பல் "தாரங்கிரி" 4 நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வருகை.

19:தியாகதீபம் அன்னை பூபதியின் 16ஆம் ஆண்டு நினைவு நாளின் இறுதி நாள் நிகழ்வுகள் தமிழீழமெங்கும் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு.

பொருண்மிய மதியுரையகத்தின் ஐந்து நாள் ஆய்வரங்கு ஆரம்பம்.

20: தமிழீழ தேசியத் தலைவர் அவர்களையும் மற்றும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான், தளபதி சொர்ணம், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் நிதித்துறைப் பொறுப்பாளர், தமிழேந்தி மகளிர் படையணித் தளபதிகளான கேணல் விதுஷா, கேணல் துர்க்கா, அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் தங்கன், மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர்



தமிழினி ஆகியோரையும் தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துக் கலந்துரையாடல்.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களை மலையக மக்கள் முன்னணித்தலைவர் சந்திரசேகரன் மேல் மாகாண மக்கள் முன்னணித்தலைவர் மனோகணேசன் ஆகியோர் தனித்தனியே சந்தித்து தற்போதைய அரசியல் நிலவரம் குறித்துக் கலந்துரையாடல்.



22: இலங்கையின் புதிய சபாநாயகராக எதிர்க்கட்சிகள் தரப்பில் நிறுத்தப்பட்ட மூத்த பாராளுமன்ற உறுப்பினர் லொக்கு பண்டார ஒரு மேலதிக வாக்கினால் தெரிவு.

24: வடமேல் மாகாண சபைத் தேர்தல்.

28: கந்தபொலவில் தமிழருக்கு எதிரான கலவரம் வெடித்தது மூன்று தமிழர்கள் பலி பலர் காயமடைந்தனர். தமிழர்களுக்குச் சொந்தமான கடைகள் தீக்கிரை.

ஜே.வி.பியின் நான்கு அமைச்சர்களும் சனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம்.

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொண்ட்புறுாவ் ஹொவ்டே தலைமையிலான குழுவினர் அரசியல் துறைப் பொறுப்பாளருடன் சந்திப்பு.

அம்பாறை மாவட்டம் கஞ்சி குடிச்சாறு பாவட்டா பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் மக்கள் தொடர்பாடல் மண்டபத்தில் அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி ஜனார்த்தனன், மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் அம்பாறை மாவட்ட கண்காணிப்புக்குழு பதில் தலைவர் தக்ஸ்ரா தலைமையிலான குழுவினரும் சந்தித்துப் போர் நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பதெனத் தீர்மானம்.

## மே

01:ஈழநாதம் மக்கள் நாளேட்டின் மட்டக்களப்புப் பதிப்பு கொக்கட்டிச்சோலை பகுதியில் இருந்து வெளியீடு.

எழுச்சிப் பேரணி பொதுக் கூட்டங்கள், கலை நிகழ்வுகளுடன் தொழிலாளர் தினம் அனுஷ்டிப்பு.

03: அரசியல் துறைப் பொறுப் பாளர் தலைமை யிலான குழு வினர் எரிக் சூல் ஹெய்ம் தலைமையிலான குழுவினரைச் சந்தித்து சமாதானப்பேச்சுவார்த்தைகள் தொடர்பாக கலந்துரையாடல்.

07:லண்டனில் இருந்து அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் கிளி. வருகை.

கிளிநொச்சியை வந்தடைந்த ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் தேசியத் தலைவர் அவர்களுடன் மந்திராலோசனை

08:சிறிலங்காவின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் மேற்கிந்தியத் தீவின் வேகப் பந்து வீச்சாளர் கொட்னி வோல் ஷின் 519 விக்கெட்டுக்கள் சாதனையை முறியடித்து புதிய உலக சாதனை.

இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டம் சுற்றுப் போட்டியில் பகுதி 2 இல் வெற்றீட்டிய மன்னார் பள்ளி முனை சென்லூசியா விளையாட்டுக்கழக வீரர்கள் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறையினரால் வெகுமதிகள் வழங்கிக் கௌரவிப்பு.

10:நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் தலைமையிலான தூதுக் குழுவினர் பிரதமரைச் சந்தித்த பின்னர் சனாதிபதி மாளிகையில் சனாதிபதியையும் சந்திப்பு.

11:தேசியத் தலைவர், அரசியல் ஆலோசகர், அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆகியோரைச் சந்தித்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன், பிரதி வெளி விவகார அமைச்சர் ஹெல்கேசன் தலை மையிலான குழுவினர் பேச்சு வார்த்தையின் அடிப்படைகுறித்து ஆராய்வு



சிறிலங்கா அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே மட்டக்களப்பில் நடைபெற்ற சந்திப்பில் குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்கான செயற்திட்டத்தினை உருவாக்குவதற்கு இணக்கம்.

12: ஜப்பானிய அரச நிதியுடன் புனரமைப்புச் செய்யப்பட்ட கிளிநொச்சி வைத்தியசாலையின் பொது நோயாளர் விடுதியினை ஜப்பானிய தூதுவர் அக்கியோசூடா திறந்து வைத்தார்.

13: விடுதலைப்புலிகளுக்கு சனாதிபதி சந்திரிகா அனுப்பிய விசேட செய்தியுடன் தூதுக் குழுவினர் கிளிநொச்சிக்கு வருகை தந்து விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர், அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆகியோரைச் சந்தித்து பேச்சு.

ஊடகவியலாளர்களைக் கிளிநொச்சியில் சந்தித்த அரசியல் ஆலோசகர் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான ஆக்க பூர்வமான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. எங்கு? எப்போது? என ஓரிரு நாட்களில் முடிவுகள் வெளியாகும் எனத் தெரிவிப்பு.

14:வன்னிக்கு வருகை தந்த விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் லண்டன் புறப்பட்டார்.

16:யாழ்ப்பாணம் கைலாசபதி கலையரங்கில் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தின் விடுதலை நூல் வெளியீட்டு விழா.



18: அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனைச் சந்தித்த ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி வடக்கு-கிழக்கு பகுதியில் அபிவிருத்தி இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஆகியன குறித்து கலந்துரையாடல்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தேவைகள் குறித்தும் பிரதேசங்களின் புனரமைப்பு, நிர்வாகம் பொருளாதார அபிவிருத்தி குறித்தும் பரிசீலனை செய்வதற்காக விடுதலைப் புலிகளின் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் தலைமையிலான குழுவினர் மட்டக்களப்பிற்கு விஜயம்.

26:அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்த எரிக் தலைமையிலான நோர்வேத் தூதுக்குழுவினர் பேச்சுக்கள் தொடர்வதற்கான நிலைப்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.



31:மட்டக்களப்பு மாவட்டத்தின் மூத்த பத்திரிகையாளரும், 2000 ஆம் ஆண்டில் சிறந்த பத்திரிகையாளராகத் தெரிவு செய்யப்பட்டவருமான ஜி.நடேசன் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.

ஜி.நடேசனுக்கு புலிகள் நாட்டுப் பற்றாளர் எனும் நிலையை வழங்கிக் கௌரவிப்பு.

அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்த மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் இடைக்கால நிர் வாகத்தை அமைப்பதன் மூலமே தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற முடியுமென தெரிவிப்பு.

---

## யூன்:-

02: மட்டு- அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ், தளபதிகளான ராம், ஜெயார்த்தன், மட்டு அம்பாறை பொறுப்பாளர் கௌசல்யன், சமாதான செயலகத்தை சேர்ந்த பவான்ந்தன் ஆகியோர் கிழக்குப் பிராந்திய தளபதியும், இராணுவத்தலைமை அதிகாரியுமான மேஜர் ஜெனரல் சாந்தகொட்டேகொட தலைமையிலான அதிகாரிகளைச் சந்தித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்தி இயல்பு நிலைமையை கொண்டு வருவது தொடர்பாக ஆராய்வு.

03:திருமலை மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமான மூதூர் பாட்டடாளி புரத்தில் திலீபன் மருத்து வமனை திறந்து வைக்கப்பட்டது.

04: அன்புச் சோலை மூதாளர் பேணலகத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட தங்ககத்தை தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் திறந்து வைத்து மூதாளர்களுக்கு அன்புப் பரிசீல்களையும் வழங்கினார்.

மூத்த பத்திரிகையாளர் எல்.எம். கோபாலரத்தினம் அவர்கள் தேசியத் தலைவரால் பாராட்டு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

06: தமிழீழமெங்கும் மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள்.

08: பாராளுமன்றத்தின் நான்காவது அமர்வு இடம்பெற்ற வேளை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும், ஆளும் கட்சி

# விடைபெறும் 2004 ஆம் ஆண்டில்...



மூத்த பத்திரிகையாளர் கோபு அவர்கள் கௌரவிப்பு

சா்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

29:லெப்.கேணல் கங்கை அமரனின் நினைவாக கிராஞ்சியில் மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.


உறுப்பினர்களுக்கும், இடையில் இடம்பெற்ற கைகலப்பில் ஜாதிக ஹெல உறுமயவின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களான பௌத்த பிக்குகள் படுகாயமடைந்தனர்.



10: 1986ஆம் ஆண்டு மண்டைதீவு கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 31 அப்பாவி மீனவர்களின் நினைவாக நினைவுத் தூபி குருநகர் சந்தியில் திறந்து வைக்கப்பட்டது.

11: பரந்தன் முதலாம் கட்டைப் பகுதியில் வாகன எதிர்ப்பு கண்ணி வெடியில் கன்டர் வாகனம் சிக்கியதில் சாரதி உட்பட மூவர் பலி.

கடற்புலி மாவீரர் லெப்.கேணல் சான்ஸ் அவர்களின் 11ஆம் ஆண்டு நினைவாக நினைவு மண்டபம் முல்லைத்தீவு கடற்புலிகளின் பாசறை ஒன்றில் திறந்து வைக்கப்பட்டது.



14: "போரிடும் வல்லமை சேர்ப்போம" இறுவெட்டு வெளியீட்டு விழாவில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பு.




15: வட-கிழக்கில் வாழ்கின்ற மக்களுக்கு மனிதாபிமானமாகப் பணி புரிகின்ற 24இற்கும் அதிகமான அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்திப்பு.

17: தமிழ் மக்களின் அபிலாசைகள், வாழ்வுரிமைகள், கோரிக்கைகளை வலியுறுத்தியும், தமிழ் மக்கள் மீதான வன்முறைத் திணிப்புகளைக் கண்டித்தும் யாழ்ப்பாணத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டனர்.





30: இராணுவத் தளபதியும், முப்படைகள் மற்றும் பொலிசாரின் விசேட அதிகாரியுமான லெப். ஜெனரல் பலகல்ல ஒய்வு பெற்றார்.

## ஜூலை

01: நாட்டின் 17ஆவது இராணுவத் தளபதியாக லெப். ஜெனரல் சாந்தகொட்டே கொடே பதவி ஏற்றார்.

03: தமிழீழ இளையோர் தேசிய விளையாட்டு விழா யாழ். பொது விளையாட்டரங்கில் கோலாகலமாக ஆரம்பம்.

04: கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட முதலாவது தமிழீழ தேசிய இளையோர் தடகள விளையாட்டு விழாவில் பரிசளிப்பு வைபவம் யாழ். பொது மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

05: பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் தேசியத் தலைவர் அவர்கள் வீரகாவியமாகிய கரும்புலிகளுக்கு வீர வணக்கம் செலுத்தியதோடு கரும்புலிகள் நினைவாக நிதர்சன நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட ''உயிராயுதம்-5, கடற்புலிகள் பாகம்-8" ஞானதரனின் "புயல் புகுந்த பூக்கள்" காவியப் படைப்புக்கள் வெளியீட்டு நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிப்பு.







07: கொழும்பு கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் பெண் ஒருவரால் குண்டு வெடிக்க வைக்கப்பட்டதில் ஒரு இன்ஸ்பெக்ரர் ஒரு கான்ஸ்டபிள் உட்பட ஐந்து பேர் கொல்லப்பட்டனர். பன்னிருவர் காயம்.

09: கிளிநொச்சி கரடிப் போக்குச் சந்திக்கு அருகாமையில் வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் திறந்து வைப்பு.




தமிழரின் கல்வித் தேவைகளும் இன்றைய நிலையும் குறித்த ஆய்வுப் பட்டறை தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் மேம்பாட்டு செயலகத்தில் ஆரம்பம்.

10: மேஜர் காந்தரூபனின் 14ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் காந்தரூபன் அறிவுச் சோலை புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டல்.

11:மூத்த பெண் படைப்பாளிகள் வானதி வெளியீட்டகத்தில் கௌரவிப்பு.

13: தேச விரோதிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மட்டு நகர அரசியல் துறைப் பொறுப்பாளர் சேனாதிராசா வீரச்சாவு.

வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்திற்கு விஜயம் செய்த நோர் வேத் தூதுவருக்கு செயலகத்தலைவர் எம்.எல் கருணாரட்ன அவர்கள் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சர்வதேச சமூகம் அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனத் தெளிவுபடுத்தினார்.

15: விடுதலைப் போராட்டத்தில் முதல் தாக்குதல் தளபதியும் மூத்த தளபதியுமான சாள்ஸ் அன்ரனியின் 21 ஆவது ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் சாள்ஸ் அன்ரனி படையணியின் போர் வீரர்களிற்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன.

கருணாவின் நெருங்கிய சகா சச்சி மாஸ்ரர் உட்பட இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கென சிறிலங்காப் பிரதம நீதியரசரால் சரத். என் சில்வாவினால் நாட்டி வைக்கப்பட்ட அடிக்கல் இனம் தெரியாதோரால் கிளறி எடுக்கப்பட்டு நல்லூர் பின் வீதியில் போடப்பட்டது.

18: ஓயாத அலைகள் 01 இராணுவ நடவடிக்கை மூலம் சிறிலங்காப் படைகளின் முல்லைத் தளம் வெற்றி கொள்ளப்பட்ட எட்டாம் ஆண்டு நிறைவு நாள் முல்லை நகரில் கொண்டாடப்பட்டது



மேஜர் முரளியின் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் பங்கு பற்றிய வீர வீராங்கனைகளை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சந்தித்து வாழ்த்தினார்.


19.திருமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் கண்காணிப்புக் குழுவினரை புலிகள் சந்தித்தனர்.

20:கிளி. மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட அதி தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டடத்தை ஜப்பானிய தூதரகம் பொருளாதாரப் பிரிவு முதன்மைச் செயலாளர் டாக்டர் யசுமியாகாரா திறந்து வைப்பு.




23. கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் முன் ஈ.பி.டி.பியினர் பிரேதப் பெட்டியுடன் ஆர்ப்பாட்டம்.

புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் வைத்தியசாலையில் நவீன வசதிகளைக் கொண்ட புதிய கட்டடம் அரசியல் துறைப் பொறுப்பாளரினால் திறந்து வைப்பு.



மாவீரர் லெப்ரினன்ட் செல்லக்கிளி அம்மானின் 21ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் அவர் வீரச்சாவடைந்த திருநெல்வேலி தபால்பெட்டிச் சந்தியில் அவர் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் நடைபெற்றன.



25: கருணா தரப்பினரிடையே பிளவு ஏழு பேர் சகாக்களால் படுகொலை சுட்டுக் கொன்றவர் புலிகளிடம் சரண்.

மணகிண்டி மலையில் அமைந்திருந்த சிறிலங்கா படை முகாம் மீதான ''இதய பூமி'' வெற்றித் தாக்குதலின் 11 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு அளம்பிலில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

27: கிளி. காவல் பணிமனையில் பாதுகாக்கப்பட்டு வரும் மனித எலும்புக் கூடுகளைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் பார்வையிட்டனர்.

டெக் நிறுவனத்தினதும் யுனிசெப் நிறுவனத்தினதும் நிதியுதவியோடு தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் புதிதாக அமைக்கப்பட்ட உப்பு உற்பத்திப் பேட்டை திறந்து வைப்பு.

28: தமிழீழ நிர்வாகத்துறையின் 7ஆவது நீதிமன்றம் அடம்பனில் திறந்து வைப்பு.

30: தமிழீழ வரலாற்றுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கிளி. மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

சிறிலங்கா புலனாய்வுத் துறையினருடன் இணைந்து செயற்பட்டு வரும் கிழக்கில் நடந்த பல இனப்படுகொலைகளுக்கு சிறிலங்கா ஆயுதப் படைகளுக்கு உதவியாகச் செயற்பட்ட வருமான புளொட் மோகன் சுட்டுக்கொலை.



# விடைபெறும் 2004 ஆம் ஆண்டில்...

## ஆகஸ்ட்

1:கொழும்பில் நடைபெற்ற ஆசியக் கோப்பைக்கான கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் இந்திய அணியை 25 ஓட்டங்களால் தோற்கடித்து ஆசியக் கோப்பையை சிறிலங்கா அணிவென்றது.

2: பட்டதாரிகள் நியமனத்தில் இடம் பெற்ற முறைகேடுகளைக் கண்டித்து யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் யாழ்.செயலகம் முன் அடையாள மறியற்போராட்டம்

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளும் பூரணஹர்த்தாலில்.


இந்திய அமைதிப்படையினர் 1989 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் படுகொலை செய்யப்பட்ட 36 அப்பாவி பொதுமக்களது ஞாபகார்த்த நினைவுத் தூபி வல்வை தீருவில் மைதானப் பகுதியில் திரைநீக்கம்.

3: கிளி.மாவட்ட பட்டதாரிகளுக்கு பட்டதாரி நியமனங்கள் புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டதை கண்டித்து கிளி.அரச செயலகம் முன் பட்டதாரிகள் மறியல்.

4:ஐ.ம.சு.முன்னணியின் தலைமைப் பதவியிலிருந்து சனாதிபதி இராஜினாமா செய்தார் வேலைப்பளுவே காரணமாம்.

அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய கடற்படை அதிகாரியான லெப்டினன்ட் ஜெனரல் வலஸ்சி கிறேக்சன் யாழ்.விஜயம்.

புதுக்குடியிருப்பில் மாபெரும் தமிழ்விழா தமிழ்த்தாய் மற்றும் தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் உருவப் படங்களைத் தாங்கிய ஊர்தி பவனியுடன் மிகவும் எழிச்சிபூர்வமாக அனுஷ்டிப்பு.



முல்லை மாவட்ட பட்டதாரிகள் பட்ட தாரி நியமனத்தை திட்டமிட்ட முறையில் புறக்கணிக்கப்பட்டதை கண்டித்து பட்டதாரிகள் அரச செயலகம் முன் மறியலில் ஈடுபட்டனர்.

இராணுவ புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பிரிகேடியர் கபிலஹெந்த விதாரண இராஜினமா.

6: விசேட உந்துகணை செலுத்தி பயிற்சி நிறைவுநாள் நிகழ்வில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பு.



தெற்கிலுள்ள சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள் அரசியல்துறைப் பொறுப் பாளர் சந்திப்பு.

7: ஜேர்மனியில் தமிழ் மொழி வளர்ச்சிக்காக அரும்பணியாற்றி வரும் இரா.நாகலிங்கம் அவர்களைத் தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் விருது வழங் கிக் கௌரவிப்பு.

9:அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பேரில் சிறிலங்கா இராணுவத்தினரால் முடக்கி வைக்கப்பட்டுள்ள தமது வாழ்விடங்களை விடுமாறு கோரி தென்மராட்சி உசன் பிரதேச மக்கள் பிரதேச செயலக முன்றலில் போராட்டம்.



10:''அந்திராக்ஸ்'' பீதியால் இலங்கையிலுள்ள அமெரிக்கத்தூதரகம் மூடப்பட்டது.

12: திருமலையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தின் முன்பாக ஈ.பி.டி.பி யினர் பிரேதப் பெட்டியை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

14: அரசியல் துறைப்பொறுப்பாளர்- ஜப்பானியத் தூதுவர் அக்சியோ சூடா சந்திப்பு

வன்னியிலுள்ள நிர்வாகத்திறமை எமக்கு மிகவும் பிடிக்குமென ஜப்பானியத் தூதுவர் தெரிவிப்பு.

15: அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினரை கத்தோலிக்க ஆஜர் குழுவினர் சந்தித்து சமாதான முயற்சியை முன்னெடுப்பது குறித்து ஆராய்வு.

16: அருமை கல்விக்கூட போராளிகளின் அறிவியல் கண்காட்சி மற்றும் ஆண்டு நிறைவு நிகழ்வில் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பு.

அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழுவினரை ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரித்தானிய நெதர்லாந்துத் தூதுவர்கள் சந்திப்பு.

18: புலிகளின் இடக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு சனாதிபதி பேச்சுக்களை ஆரம்பிக்க முனைந்தால் ஜே.வி.பி.கட்சியினர் உண்ணாவிரதமிருந்து உயிரைத் துறப்பர் என அக்கட்சியின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவிப்பு.

20. யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகச் கட்டளை அதிகாரியாக மேஜர்.ஜெனரல் சுனில் தென்னக் கோன் பதவியேற்பு.

மட்டு.காயாங்கேணியில் லெப். கேணல் பாவா, யோகா ஆகியோர் வீரச்சாவு.

23: இராணுவத்திற்கு தகவல்களை வழங்கி வந்தவர் கொழும்பில் சுட்டுக்கொலை.

காந்தருபன் அறிவுச் சோலை சிறுவர் இல்ல பிள்ளைகள் நடாத்தும் கல்வி கண்காட்சி ஆரம்பம்.

24: அக்கரைப் பற்று நீதிமன்றத்தில் சச்சி மாஸ்ரரின் சகாக்கள் சுட்டுக் கொலை.




இரா.நாகலிங்கம் அவர்களுக்கு விருது வழங்கிக்கௌரவிப்பு.

சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச் சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் 10 பேர் சிறைச்சாலையின் கூரையின் மீது ஏறி நின்று போராட்டம் நடத்தினார்.


27: தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பளரை சமஷ்டி அமைப்பின் தலைவரும் முன்னாள் ஒன்ராரியோ முதல் வருமான பொப்ரோ சந்தித்து சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டிருப்பது குறித்து ஆராய்வு.

லெப். கேணல் ராஜனின் 12ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு யாழ். மாதகலிலும், கிளியிலும் சிறப்பாக நடைபெற்றது.



28: இராணுவத்திற்கு தகவல் கொடுத்து வந்த திஸ்ஸவீரசிங்க துஷ்யந்தகுமார் என்பவர் கொழும்பில் சுட்டுக்கொலை.

போராளியும், இலக்கியப் படைப்பாளியுமானதமிழ்க்கவியின் "இருள் இனி விலகும்'' எனும் போரியலை சித்தரிக்கும் இலக்கிய நாவல் வெளியீடு.



## செப்ரெம்பர்

1:மாபெரும் விவசாயக் கண்காட்சி வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் ஆரம்பம்.

தமிழீழ வைப்பகத்தின் 10 ஆவது கிளை முல்லைத்தீவில் திறந்துவைப்பு.

14: அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் சந்திப்பு.

தமிழீழக் காவல்துறை பொறுப்பாளர் நடேசன் நீதி, நிர்வாகத்துறை பொறுப்பாளர் பராவை தென்னிலங்கை ஊடகவியலா ளர்கள் சந்திப்பு.

இந்திய கடற்படைத்தளபதி திருமலை விஜயம்.இந்திய போர் கப்பலான ஐ.எல். எஸ் கங்கா கொழும்புத் துறைமுகத்துக்கு வருகை.

நிதித்துறையின் நிதி மேலாண்மையியற் கல்லூரி கிளியில் திறந்து வைப்பு.

''பனைச் செல்வம்'' எனும் நூல் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

20: தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளரை கனேடியத் தூதுவர் வலறிறேம் சந்திப்பு.

அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் யாழ். விஜயம்.

ஜப்பானியத் தூதரக அதிகாரிகள் யாழ். விஜயம்.


21: தேச விரோத செயல்களில் சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டு வந்த கருணாவின் சகோதரன் றெஜி உட்பட மூவர் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் பலி.

24.புலிகளின் குரல் நிறுவனத்தின் வெளியீடனான "போர் நடந்த மண்ணில்" நூல் வெளியீட்டு விழா யாழ். வீரசிங்க மண்டபத்தில் நடைபெற்றது.

25:கனடா ரொரான்ரோ நகரில் பொங்கு தமிழ் நிகழ்வு மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.



இலவச மழலைகள் கணினிப் பூங்கா கிளி நொச்சியில் அரசியல் துறைப் பொறுப்பாளர். தமிழ்ச் செல்வனால் திறந்து வைப்பு.



26:தியாகி லெப். கேணல் திலீபன், கேணல சங்கர் ஆகி யோரின் திருவுருவப் படங்க ளுக்கு தமிழீழ தேசி யத் தலைவர் அவர் கள் விளக்கேற்றி அஞ்சலி.

27: தமிழ்ச்சங்கம் நடாத்திய திருவள்ளுவர் விழா கிளிநொச்சியில் ஆரம்பம்.

28: அரசியல் துறைப் பொறுப் பாளர் சு.ப தமிழ்ச் செல்வன் உள்ளிட்ட குழுவினர் ஐரோப்பாவிற்கு விஜயம்.

## ஒக்ரோபர்

01: சுவிற்சர்லாந்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதி நிதிகள், சட்டநிபுணர்களுடனான கலந்துரையாடல் ஆரம்பம். இதன்போது இடைக்கால நிர்வாக சபைக்கான வரைவு பற்றியும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்பட்டன.



ஜெனீவா சென்ற விடுதலைப் புலிகளின் அரசியற்குழுவினரைச் சுவிற்சர்லாந்து வெளியுறவு அமைச்சின் உயரதிகாரிகளும், நிபுணர்களும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சிறுவர்தின நிகழ்வு தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

03.தமிழீழத்தேசியத்தலைவரின் பன்முக ஆளுமையைச் சித்திரிக்கும் ஆங்கில நூலைச்சுவிசில் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வெளியிட்டு வைத்தார்.




# விடைபெறும் 2004 ஆம் ஆண்டில்...

05:லெப்.கேணல் புலேந்திரன், குமரப்பா உட்பட பன்னிரு வேங்கைகளின் 17ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு தமிழர் தாயகமெங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

06:தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் சுவிற்சர்லாந்திலிருந்து ஒஸ்திரியாவிற்கு விஜயம்.

2ஆம் லெப்.மாலதியின் 17ஆவது ஆண்டு நினைவு நாளையும், தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு மாபெரும் படைக்கலக் கண்காட்சி கிளிநொச்சியில் ஆரம்பம்.




விடுதலைப் புலிகளுக்கும் - சிறிலங்காப் பாதுகாப்புப் படைத் தரப்பினருக்குமிடையில் வவுணதீவுப் பிரதேசச் செயலகத்தில் சந்திப்பு இடம் பெற்றது.

சர்வதேச ஆசிரியர்தின நிகழ்வுகள் தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

07:லெப்.கேணல்.நிரோஜனின் நினைவுநிகழ்வும் "அலைபாடும் பரணி" இசைத்தட்டு வெளியீடும் முல்லைத் தீவில் இடம்பெற்றது.

தேர்தல் வாக்களிப்பின் போது அடையாள அட்டையை கட்டாயமாக்க சட்டமூலம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

10: தமிழீழ பெண்கள் எழுச்சி நாளும், 2ஆம் லெப் மாலதியின் நினைவு நாளும் தமிழர் தாயகமெங்கும் பெரும் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டன.



2ஆம் லெப். மாலதியின் உருவச் சிலை இரணைமடுச் சந்தியில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

14: ஐரோப்பாவிற்கு விஜயம் செய்த தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் பின்லாந்து அரச பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

18: அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிவெளிவிவகார அமைச்சரை ஐரோப்பிய ஒன்றியச் செயலகத்தில் சந்தித்தனர்.

19: மட்டு. மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராகப் போட்டியிட்ட கிங்ஸ்லி இராசநாயகம் இனம் தெரியாதோரால் சுட்டுக்கொலை.

21: சுவீடன் நாட்டு வெளிவிவகார அமைச்சின் இராஜாங்கச் செயலாளர் அனித்தா டயறிக்கையை அரசியல் துறைப் பொறுப்பாளர் சுவீடனில் சந்தித்தார்.

22: ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் ஜேர்மன் நாட்டு இராஜாங்கச் செயலரைச் சந்தித்தனர்.

## நவம்பர்

09: தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் கிளிநொச்சி வந்தடைந்தார்.



நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்தார்.

10: கிளிநொச்சியில் தமிழீழ சட்டக்கல்லூரியின் புதிய கட்டடத்தைத் திருமதி. அடேல் பாலசிங்கம் திறந்து வைத்தார்.



11: தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு.வே.பிரபாகரனை நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜோன்பீற்றர்சன் தலைமையிலான சமாதானத் தூதுக்குழுவினர் சந்தித்தனர்.



பூநகரித்தளம் மீதான தவளைப் பாய்ச்சல் நடவடிக்கையில் 13 ஆம் ஆண்டு வெற்றிவிழா பூநகரியில் கொண்டாடப்பட்டது.

14. கொடிகாமம்- இராமாவில் பகுதியில் இராணுவத்தின் நீர்த்தாங்கி வண்டி மோதியதில் இளைஞர் ஒருவர் பரிதாப மரணம்.



18:அரசின் வரவு- செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

19: வல்வெட்டித்துறை விளையாட்டு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்கள் மீது உந்துருளியில் வந்தோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலி, ஒருவர் காயம்.

20: வல்வெட்டித்துறையில் இளைஞர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டமையைக் கண்டித்து யாழ்.குடாநாடு முழுவதும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.




புலிகளின் குரல் வானொலியின் 14ஆம் ஆண்டு நிறைவுவிழா புலிகளின் குரல் வானொலியின் ஒன்று கூடம் மண்டபத்தில் மிகவும் சிறப்பாக இடம் பெற்றது.

21: மாவீரர் எழுச்சி வார நிகழ்வுகள் தமிழர் தாயகமெங்கும் உணர்வுபூர்வமாக ஆரம்பம்.



மாவீரருக்கு அஞ்சலி



24:மன்னாரில் மாவீரர் தினநிகழ்வில் ஏற்றிய தேசியக் கொடியை படையினர் அகற்றியதால் படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.


25: மாவீரர் நாளின் ஆரம்நாள் நிகழ்வுகள் தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உணர்வுபூர்வமாக ஆரம்பமானது.

தமிழீழ தேசியத்தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தலைவருக்கு பல்வேறு அமைப்புக்களும் கேடயங்கள் பரிசில்கள் வழங்கினர்.


மாவீரர் தின நிகழ்வுகளில் கலந்து கொண்ட மக்கள் மீது மன்னாரிலும், வவுனியாவிலும் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியும் கண் மூடித்தனமான தாக்குதலையும் மேற்கொண்டனர்.

மன்னாரில் இராணுவத்தினர் மக்கள் மீது மேற்கொண்ட அடாவடித்தனத்தை ஆட்சேபித்து தமிழரசுக் கட்சியினர் பாராளுமன்றத்தில் போராட்டம் நடாத்தி பாராளுமன்ற அமர்வுகள் ஒத்தி வைக்கப்பட்டது.

26: தமிழர் தாயகம் எங்கும் தமிழீழத் தேசியத்தலைவரின் பிறந்தநாள் நிகழ்வு வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.



தமிழ் ஊடக அறிவியற் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டு விழா . கிளிநொச்சியில் இடம் பெற்றது.



27: மாவீரர் தின இறுதிநாள் நிகழ்வுகள் தாயகமெங்கும் மற்றும் தமிழர்கள் வாழும் நாடுகளிலும் உணர்வுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

## டிசம்பர்

1: பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக முன்னாள் வட-கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தன பதவியேற்றுக் கொண்டார்.

போக்குவரத்து சுற்றாடல் மற்றும் மகளிர் விவகார முன்னாள் அமைச்சரும், முன்னாள் பாதுகாப்பு அமைச்சருமான லலித்அத்துலத் முதலியின் பாரியார் சிறிமணி உயிரிழந்தார்.

சிறிலங்காப் படையினரின் அடாவடித்தனத்தைக் கண்டித்து மன்னாரிலும், வவுனியாவிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.



2:அறிவமுது பதிப்பகத்தின் புதிய வெளியீடுகளான "போர்உலா", "உண்மை மனிதனின் கதை", "பண்டிதர் நாட்குறிப்பேடு", "மனக்கோலம்" போன்ற நூல்களின் அறிமுகவிழா தமிழ் நாடு விடுதலை சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவனின் பங்கேற்புடன் மிகவும் சிறப்பாக கிளி.பண்பாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.



3: மாற்றீடான வலுவுள்ளோர் தினம் கிளிநொச்சியில் கொண்டாடப்பட்டது.




ஐ.தே.கட்சியின் சனாதிபதி வேட்பாளராக கட்சித்தலைவர் ரணிலின் பெயர் கட்சியின் 50 ஆவது சம்மேளன மாநாட்டில் தெரிவிப்பு.

6: தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவப் பயிற்சிக்கல்லூரியில் சிறப்புப் பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறும் சிறப்பு அணிகளுக்கான தகைமைச் சான்றிதழ்களை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார்.

7: முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க மீது உச்சநீதிமன்றம் இரண்டாண்டு கடூழியச் சிறைத்தண்டனை விதிப்பு.

10: சர்வதேச மனிதவுரிமைகள் தினம் கிளி.பண்பாட்டு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்படபலர் கலந்து கொண்டனர்.

# விடைபெறும் 2004 ஆம் ஆண்டில்...




சிறப்பு அணிக்கு சான்றிதழ் வழங்கல்

சர்வதேச மனிதவுரிமைகள் தினத்தை முன்னிட்டு யாழ் மனிதவுரிமைகள் செயலகம் முன்பாக படையினரால் கைதாகிக் காணாமற் போனோரின் நலன் வேண்டி தீபம் ஏற்றி பிரார்த்தனை இடம் பெற்றது.

மூத்த அறிஞர் சொக்கன் காலமானார்.

11: லெப்.கேணல் மறவன் சுகயீனம் காரணமாகச் சாவடைந்தார்.

கொழும்பு குதிரைப்பந்தயதிடலில் நடைபெற்ற ஹிந்தித் திரைப்பட நடிகர்களின் நிக்ழ்வின் போது குண்டு வெடித்ததில் இரண்டு பேர் பலி.


13: வடக்கு கிழகில் தொடர் மழை வெள்ளப்பாதிப்பு.

வரணி மக்கள் தமக்கு மீள்குடிய மர்வுக் கொடுப்பனவு சீராக வழங் கப்படாமையைக் கண்டித்து யாழ். செயலகம் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

14: கூட்டுப்பயிற்சியில் கலந்து கொள்ள இரண்டு இந்திய கப்பல்கள் சிறிலங்கா கடற்படைதலைமையகத்தை வந்தடைந்தனர்.

15: சமாதான முயற்சிகள் தொடர்பில் அரசின் தீர்க்கமான நிலைப்பாட்டை சனாதிபதி தெரி விக்க வேண்டுமென அமெரிக்கா,ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் கூட்டாக வலியுறுத்து.

16: லெப்.கேணல் மறவன் மாஸ்ரரின் வித்துடல் வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலுமில்லத்தில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொது மக்கள் ஆகியோரின் இறுதிவணக்கத்துடன் பூரண இராணுவ மரியாதைகளுடன் விதைக்கப்பட்டது.



இந்தியா-சிறிலங்கா கடற்படை கூட்டுப்பயிற்சி ஆரம்பம்.

17: பேச்சுவார்த்தையை விரைவில் ஆரம்பிப்பதென சுதந்திரக் கட்சி மத்தியகுழு கூடித் தீர்மானித்தது.

19: கொழும்பில் றோமன் கத்தோலிக்க தேவாலயத்திற்குத் தீவைப்பு.

சமாதானத்தை வலியுறுத்தி தென்மராட்சியில் மனிதசங்கிலிப் போராட்டம் இடம் பெற்றது.

21: சிறைத்தண்டனைக் கைதியாக வைக்கப் பட்டுள்ள முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸா நாயக்கவை விடுதலை செய்யக்கோரி ஐ.தே.கட்சி ஆதர வாளர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்.

அமெரிக்க பாதுகாப்பு ஆய்வாளர்கள் யாழ்ப் பாணத்திற்கு இரகசிய விஜயம்.

இரண்டாவது மனித சங்கிலிப் போராட்டம் கைதடியில் இடம் பெற்றது.

அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமை யிலான குழுவினரை யாழ். இடம் பெயர்ந்தோர் சங்கத் தலைவர் தலைமையி லான குழுவினர் சந்தித்தனர்.

உரும்பிராயில் மேஜர் முரளி உள்ளிட்ட 10வேங் கைகளின் நினைவு நிகழ் வுகள் கொண்டாடப்பட்டது.

இராணுவத்தின் அநாகரிகமான செயலால் மட்டக்களப்பிலிருந்து வன்னிக்கு வந்த 50 புலிகளின் பயணம் ரத்து.

24: தென்மராட்சிப் பகுதியில்பொது அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மூன்றாவது கட்ட மக்கள் எழுச்சிப் போராட் டம் கொடிகாமத்தில் இடம் பெற்றது.



1996-1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போனோரின் விவகாரத்தில் சில சட்டத் தரணிகளின் பொறுப்பற்றதனத்தை கண்டித்து யாழ்.மாவட்ட அன்னையர் முன்ன ணியுடன் இணைந்து காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் மறியற்போராட்டம் நடத்தியது.

26: வட-கிழக்கு தென்பகுதியில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பினால் ஆயிரக் காணக்கானோர் உயிரிழப்பு, ஆயிரக் கணக்கானோர் காணாமல் போ..யினர், பல்லாயிரக் கணக்கானோர் காயமடைந்தனர்.

27: தாயகப் பிரதேசத்தில் கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு உதவ திட்டமிடல் அபிவிருத்திச் செயலகத்தில் செயலணிக்குழு அமைப்பு.

29:நிலவதிர்வுப் பேரலையால் உறவு களைப் பறிகொடுத்த அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் அனுதாபம் தெரிவிப்பு.

### பேரலையால் அனர்த்தம்






# சுனாமி பேரலைகள் இந்தியாவைத் தாக்க வருகின்றன

# முன் கூட்டியே கிடைத்த தகவல்கள் அலட்சியம்!

## மத்திய அமைச்சர் கபில் சிபல் மீது குற்றச்சாட்டு

(புதுடில்லி)

கடந்த 26 ஆம் திகதி காலை 6-30 மணியளவில் இந்தோனே



சியாவில் ஏற்பட்ட பூகம்பத்தால் சுனாமி அலைகள் உருவாகி அடுத்த 3 மணி நேரத்தில் சென் னை உட்பட தமிழகக் கடற்கரையைத் தாக்கியது. பல ஆயிரக்கணக்கான உயிர்களை பலிவாங்கியது. இலட் சக் கணக்கானவர்கள் வீடுகளை இழந்து அகதிகளாக தவிக் கிறார்கள்.

காலை 6-30 மணிக்கு உரு வான சுனாமி அலை பற்றி 9 மணி வரை கரையோரப் பகுதி மக்க ளுக்கு தெரிவிக்க முடியாமல் போ னது பெரும் சர்ச்சையை கிளப் பியுள்ளது.

ஆனால் சுனாமி அலை தாக் குதல் பற்றி இந்திய மத்திய அரசுக் கு தகவல் கிடைத்துள்ளது. அவர் கள் எச்சரிக்காமல் மெத்தனமாக விட்டு விட்டதால் பேரழிவு ஏற்பட் டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந் துள்ளது. சுனாமி அலை உருவான தகவல் மத்திய அமைச்சர் கபில் சிபலுக்கு முன்கூட்டியே தெரியும் என்ற தகவல் இப்போது வெளியா கியுள்ளது. சரியாக 6-28 மணிக்கு இந்தோனேஷியாவில் நில நடுக்கம் ஏற்பட்டதும் அது உலக நாடுகளில் அனைத்து மையங்களில் உள்ள பூகம்பத்தை கண்டுபிடிக்கும் கருவி களில் பதிவாகி இருக்கிறது.

அடுத்து சுனாமி அலைகள் உருவாகி இந்தியக் கடற்கரையை நோக்கி வருவதும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. சுனாமியின் ஆபத்தை உணர்ந்து இந்தோனேஷியா உட னடியாக இந்தியாவுக்கு தொடர்பு கொண்டு எச்சரிக்க முயன்றுள்ளது ஆனால் இந்தோனேஷியாவில் தகவல் தொடர்பு அடுத்த வினா டியே நாசமாகி விட்டது.

அதன் பிறகுதான் மத்திய அமைச்சர் கபில்சிபலுக்கு எஸ்.எம். எஸ். மூலம் செல்போனில் தகவல் தெரிவித்துள்ளது. 6.30 மணிக்கு அவரது செல்போனில் இந்த தகவல் பதிவாகியுள்ளது. கடல் வள ஆராய்ச்சி துறை அமைச்சர் என்பதால் கபில்சிபலுக்கு இந்தத் தகவல் வந்துள்ளது. அவர் காங் கிரஸ் தலைவர் சோனியாவிடம் தெரிவிக்க முயன்று இருக்கிறார். சோனியா 25 ஆம் திகதி இரவு கிறிஸ்மஸ் பிரார்த்தனை நடத்தி விட்டு அதிகாலை 4 மணிக் குத்தான் தூங்கச் சென்றார். எனக் கேள்விப்பட்டு அவரைத் தொந் தரவு செய்ய வேண்டாம் என்று விட்டு விட்டார். அடுத்து அவர் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு தகவல் தெரிவித்து இருக்கலாம் அல்லது உள்துறையை எச்சரித்து இருக்கலாம் இதில் எதையும் அவர் செய்யாமல் விட்டு விட்டார். அதன் பிறகு தான் சுனாமி அலை அடுத்த 1 மணி நேரத்தில் அந்தமா னைத் தாக்கியது. கடற்படையினர் இது பற்றி டில்லிக்குதகவல் தெரி வித்து எச்சரித்துள்ளனர். யாருமே அதைப் பெரிதாக எடுத்துக் கொண்டு செயற்படவில்லை.

கடற்படை எவ்வளவோ எச் சரிக்க முயன்றுள்ளது. மத்திய அரசு விழித்துக் கொள்ளவில்லை. கபில்சிபலுடன் தொடர்பு கொள்ள முடியாததால் அவரது அமைச்சை முன்பு கவனித்த முரளி மனோகீர் ஜோஷிக்கு தெரிவித்து இருக் கிறார்கள். இதற்குள் எல்லாம் முடிந்து பேரழிவு ஏற்பட்டு விட்டது. கபில்சிபலுக்கு சுனாமி ஆபத்து தகவல் கிடைத்தும் அவர் மாநில அரசை எச்சரிக்கத் தவறி விட்டதால் கடும் உயிர்ச்சேதம் ஏற்பட்டு விட்டது. மக்களைக் காப்பாற்ற கிடைத்தவாய்ப்பைகோட்டை விட்டு விட்டதாக கடும் குற்றச்சாட்டு எழுந் துள்ளது.

## அந்தமான் நிக்கோபார் தீவுகளின் மக்கள் தமிழ் நாடு வருகை

(சென்னை)

'சுனாமி' அலை தாக்குதலில் மிகவும் பாதிக்கப்பட்ட அந்தமான் நிக்கோபார் தீவுகளில் உள்ள பலர் உயிர்பிழைத்தால் போதும் என தமிழகத்துக்கு வருகின்றனர். கடந்த 28 ஆம் திகதியில் இருந்து விமா னப்படையின் தனி விமானம் மூலம் இவர்கள் வந்த வண்ணமுள்ள னர்.முதலில் விமானப்படை, கடற்படையைச் சேர்ந்த குடும்பத் தினர்1200 பேர் சென்னைக்கு வந்திருந்தனர்.இதுதவிர அந்த மானில் வசித்த தமிழகம், ஆந்திரா, மகாராஷ்டிரா,மேற்கு வங்காளத் தைச் சேர்ந்த 744 பேர்சென் னைக்குவிமானத்தில் அழைத்து வரப்படுகின்றனர்.

# அந்தமானில் நேற்றும் நில நடுக்கம் ஜம்முகாஷ்மீர் பகுதியும் அதிர்ந்தது!

(புதுடில்லி)

பூகம்பம் மற்றும் சுனாமி கடல் அலையில் சோகம் மறைவதற்குள் அந்தமான் தீவில் ..ந்த 2 நாட்களாக அடுத்தடுத்து பூகம்பம் ஏற்பட்டு வருகின்றது. நிக்கே..ார் தீவின் கீழ்பகுதியில் உள்ள இந்திரா முனை பகுதி தண்ணீரில் மூழ்கிவிட்டது.

இந்த நிலையில் நேற்று அதிகாலை கிரேட்நிக்கோபார் தீவில் 2 முறை நிலநடுக்கம் ஏற்பட்டது. அதிகாலை 3.05 மணிக்கும், 4.35 மணி க்கும் ஏற்பட்ட நிலநடுக்கம் கிரேட் நிக்கோபார் அருகேயும் மையமாக உருவானது 5.5 ரிக்டர் மற்றும் 5.2 ரிக்டர் அளவு பதிவானது. ஜம் முகாஷ்மீரில் நேற்று முன்தினம் இரவு 10.35 மணி அளவில் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. 4.0 ரிக்டர் அளவு பதிவான இந்த நில நடுக்கத்தை உணர்ந்த பொது மக்கள் வீடுகளை விட்டு வெளியே ஓடிவந்தனர்.இது பற்றிவானிலை அவதான நிலையம் கூறுகையில், ஜம்முகாஷ்மீரில் ஏற் பட்டது லேசான நில நடுக்கம். இதனால் எந்தப் பாதிப்பும் இல்லை என்று தெரிவித்தனர்.

# இனம் தெரியாத குழு தாக்குதல் ஆலடி அருணா மரணம்!

(சென்னை)

தமிழக முன்னாள் அமைச்சர் ஆலடிஅருணா நேற்றுபடுகொலை செய்யப்பட்டார்.



தி.மு.க. ஆட்சி யின் போது சட்ட அமைச்சராக இருந் தவர்ஆலடி அரு ணா (வயது-70) இவரது சொந்த ஊர் நெல்லை மாவட்டம் ஆலங் குளம் அருகே உள்ள ஆலடிப் பட்டி.தி.மு.க.மூத்த தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த இவர், சென்னை அடையாறில் குடும் பத்துடன் வசித்து வந்தார். ஆலங் குளம் அருகே சீதபற்பநல்லூரில் என்ஜினீயரிங் கல்லூரி நடத்தி வந்தார். அரசியல் பணி மற்றும் சொந்தவேலைவரும்போது இவர் ஆலங்குளத்துக்குச் செல்வார்.

சில தினங்களுக்கு முன்பு அவர் ஆலங்குளம் சென்றிருந்தார். நேற்றுக் காலை 7.00 மணி அளவில் அவர் ஆலங்குளத்தில் உள்ள தன் வீட்டில் இருந்து நடைப் பயிற்சி சென்றார்.

அவருடன் ஆசிரியர் பொன் ராஜ் மற்றும் விவசாயி சாக்ரடீஸ் ஆகிய இருவரும் சென்றனர். அவர்கள் மூவரும் ஆலங்குளம் கீழ்ப்புறம் உள்ள புதுப்பட்டி ரோடு பகுதியில் நடந்து சென்று கொண்டி ருந்தனர். புதுப்பட்டிரோடு வளை வில் வரும்போது ஆலடி அருணா வை 2 உந்துருளியில் வந்த ஒரு மர்மக்குழு வழிமறித்தது. அந்த மர்மமனிதர்கள்ஆலடி அருணா வுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட னர்.சூழ்நிலை சரியில்லாததை உணர்ந்த ஆலடிஅருணா "பிறகு பேசிக்கொள்ளலாம்" என்றார். அதற்குள் மர்மக்குழுவைச் சேர்ந்த ஒருவர்ஆலடிஅருணாவை நோக்கி கைத்துப்பாக்கியால் சுட்டார். ஆலடி அருணா கழுத்தில் குண்டு பாய்ந்தது. அவர் தப்பி ஓடினார். உடனே அந்தக் குழு விரட்டிச் சென்று பின்புறம் கழுத்தில் வெட்டி யது.உடலின் பல்வேறு பாகங்க ளில் அரிவாள்வெட்டுவிழுந் ததால் ஆலடிஅருணாவும், அவருடன் சென்ற ஆசிரியர்பொன்ராஜும் அதேஇடத்தில் சாய்ந்தனர். இர்த்த வெள்ளத்தில் அவர்கள் இருவரும் அதே இடத்தில் உயிரிழந்தனர்.

# பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீளமைக்க நீண்டகாலத் திட்டம் தேவை கௌசல்யன் வலியுறுத்து

மட்டக்களப்பில் கடல் கொந்தளிப்பால் ஏற்பட்டுள்ள நிலைமைக்குப் பின்னர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்துதமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு- அம்பாறை அரசியல்துறை பொறுப்பாளர் கௌசல்யன் நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஹேரத் அபேசேகரவை சந்தித்து உரையாடினார்.

உணவு, நீர், சுகாதாரம் உட்பட மக்களின் வாழ்க்கையை மீளமைக்க நீண்ட காலத் திட்டம் வகுக்க வேண்டுமென இதன் போது கௌசல்யன் வலியுறுத்தினார். சுகாதார நிலைமை மேம்படுத்தப்பட வேண்டும், பாதிக்கப்பட்டவர்களின் முழுமையான விபரங்கள் திரட்டப்பட வேண்டும் வீதி புனரமைப்பு தொலைத்தொடர்பு என்பவை சீரமைக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் அரசாங்க அதிபரிடம் விடுக்கப்பட்டன. இதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொதுத் திட்டத்தின் கீழ் தமது நிர்வாக சேவைப்பொறுப்பாளர் முரளியை தாம் நியமிப்பதாகவும் கௌசல்யன் தெரிவித்தார் இதனை ஏற்றுக்கொண்ட அரசாங்க அதிபர் தாம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இந்த விடயத்தில் முழு ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்தார். (32)

# பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்கு அமெ.உதவுமென உறுதியளிப்பு

இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளிக்கும் வேலைத்திட்டத்திற்கு எமது அரசாங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்குமென அமெரிக்க சனாதிபதி புஷ் உறுதியளித்துள்ளார்.சனாதிபதி சந்திரிகாவுடன் தொலை பேசியில் உரையாடிய வேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட ஆசிய நாடுகளுக்கென அமெரிக்கா ஏற்கனவே நான்கு இலட்சம் டொலர்களை வழங்கியுள்ளது.இச் சந்தர்ப்பத்தில் வழங்கப்படும் உதவித் தொகை நீண்டகால நிவாரணத் திட்டத்தின் ஒரு ஆரம்ப நடவடிக்கை மட்டுமே எனக் கூறியுள்ளார். நிவாரண நடவடிக்கைகள் தொடர்பான துரித நீண்டகால புனர்வாழ்வு, புனர்நிர்மாண வேலைத்திட்டங்கள் பற்றி சனாதிபதி அமெரிக்க சனாதிபதிக்கு விளக்கிக் கூறியுள்ளார்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவர்க்கும், இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக் களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

டொல்பின்,எல்ப்(F), கன்ரர் ரக வாகனங்களின் உதிரிப்பாகங்கள் உங்களுக்கு மலிவாகத்தேவையா? உடனே விரையுங்கள்.

S.P.S. MOTORS

32/B இரண்டாம் குறுக்குத்தெரு வவுனியா.

(சி-11056)

# சாவு அறிவித்தல்

திருமதி

## இலங்கேஸ்வரன் பிறேமலதா

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்களம் முல்லைத்தீவு.

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் முல்லைத் தீவை வதிவிடமாகக்கொண்ட திருமதி இலங்கேஸ் வரன் பிறேமலதா கடந்த 26.12.2004 இயற்கை அனர்த்தத்தால் அகாலச்சாவைத் தழுவிக்கொண்டார். அன்னார் இராசரத்தினம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும், கனகசுந்தரம் மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும், கனகசுந்தரம் இலங்கேஸ்வரனின் அன்பு மனைவியும் ரீசீஸ்காந் இந்துக்கல்லூரி திருமலை, துக்சீஸ்காந் மத்தியமகாவித்தியாலயம், முல்லைத்தீவு, அகல்யாணி சென்மேரீஸ் வித்தியாலயம் முல்லைத்தீவு ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார். இறுதிக் கிரிகைகள் நடைபெற்றுள்ளது. இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சமாதி ஒழுங்கை,
திருகோணமலை.

(5518)

தகவல்:-
கணவர்.

# பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளிநாட்டுத்தூதுவர்களை அழைத்துச் செல்ல கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது

## - பா. உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(அலுவலக செய்தியாளர்)

**கடல்புவி நடுக்கத்தால் ஏற்பட்ட பேரலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலையை உலகிற்கு வெளிப்படுத்துவதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வெளிவிவகாரக் குழு வெளிநாடுகளின் தூதுவர்களையும் வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் அழைத்து வந்து பாதிப்புக்களை காண்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் முல்லை நகரின் வடமராட்சி கிழக்கின் பாதிக்கப்பட்டபகுதிகளைப் பார்வையிட்டபோது பாதிக்கப்பட்ட மக்களின் அவலத்தைப்போக்க கூட்டமைப்பு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனக்கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கடற்புவி நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முல்லைத்தீவும் வடமராட்சி கிழக்கும் முழுமையாக அழிவடைந்திருக்கின்றன. இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் தொகை அதிகம். அவர்களுக்கான எந்த உதவிகளையும் அரசாங்கம் இது வரை வழங்கவில்லை. தமிழ் மக்கள் தான் பாதிக்கப்பட்ட உறவுகளுக்குஉடனடிஉதவிகளை வழங்கி வருகின்றனர். இந்தநிலையில் நாங்கள் யாழ்ப்பாணத்தில் அரச அதிபருடனும் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் உள்ளிட்ட அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகளுடன் கடந்த மூன்று நாட்களாக வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை எவ்வாறு பெறுவது என்பது பற்றிய பல திட்டங்களைப் பற்றி ஆராய்ந்தோம். அங்கு கொள்கை அளவில் எங்களுக்கு இணக்கம் தெரிவித்திருந்தனர். ஆனால் இது வரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் உதவிப்பொருட்கள் போய்ச் சேருவதாகத் தெரியவில்லை. ஒருசில இடங்களில் இவர்களின் உதவிகள் சென்றடைந்திருக்கின்றன.

பெரும் பாலான உதவிகள் கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்படாத எங்கள் மக்களால்தான் வழங்கப்பட்டுவருகிறது.

அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் மக்களைப் பெருமளவில் சென்றடையாத நிலையில் நேற்று முன்தினம் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் பேசி இருக்கிறோம். அதே வேளை நேற்றுமுன்தினம் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் அவர்களுடனும் பேசி இருக்கிறார்கள்.

இந்த நிறுவனங்களின் உதவிகளை நாங்கள் எப்படிப்பெற விரும்புகிறோம் என்பதைக் கூட நாங்கள் அவர்களிடம் கூறியிருக்கிறோம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்த மக்களுக்குஉதவ எத்தகைய நடவடிக்கைகளை வழங்கும் எனக் கேட்டதற்கு;

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முதலாவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தின் கீழ் மாவட்ட ரீதியில் அவர்களின் நடவடிக்கைகளுக்கு எமது உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்குகிறோம்.

வரப்போகும் ஒரு சில நாட்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வெளிவிவகாரக்குழு முக்கியமான வெளிநாட்டுத் தூதுவர்கள் அனைவரையும் சந்தித்துத் தமிழர் தாயகத்தில் நடந்திருக்கின்ற மிகப்பெரிய அழிவுகளைப் பற்றி விளக்கி வெளிநாட்டு அரசுகளின் பிரதிநிதிகளையும் வெளிநாட்டு அரச நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் அழிவு நடைபெற்ற இடங்களுக்குக் கூட்டிச் சென்று அவற்றை அவர்களுக்குக் காட்டி விளக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

இரண்டாவது கட்டமாக உதவிகளையும், நிவாரணங்களையும் நேரடியாக எங்கள் பிரதேசங்களுக்கு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். அரசின் ஊடாக இந்த உதவிகள் வர வேண்டும் என்பதை நாங்கள் முற்றாக நிராகரிக்கிறோம். நாங்கள் இதனை நிராகரிப்பதற்கான காரணம் அனர்த்தம் நடந்தது முதல் இன்று வரை எங்களுக்கு அரசு எதையும் செய்யவில்லை.அவர்கள் எப்படி மக்களை நடத்தினார்கள் என்பதனை வைத்து நாங்கள் அரசின் ஊடாக உதவிகள் வருவதை எதிர்க்கிறோம். அரசு எங்களுக்கு நேர்மையான முறையில் உதவிகளை வழங்கும் என நாங்கள் நம்பவில்லை என்றார். (லோ,தீ)

# 10 ஆம் ஆண்டு நினைவில்



அமரர்

## சின்னையா இரத்தினம்

(பிரபல வெற்றிலை வியாபாரி சாவகச்சேரி)

| அன்னை மடியில் | அம்மன் திருவடியில் |
| --- | --- |
| 25 – 06 – 1925 | 01 – 01 – 1995 |

திதி- 11 - 01 - 2005

பத்து ஆண்டுகள் நிறைந்தது ஐயா!
முத்து மாரியம்மன் திருத்தாள்களில் நிறைந்து
சத்தமின்றி நித்தம் நீஆழைத்துயர்ந்தீர்–நல்ல
பத்தினிக்கு முத்தான பத்தைப் பெற்று;
வித்தகராய் விளையவைத்தீர் ஐயா!
கொத்துப்பறை கொட்டி முழக்கி;
தித்தித்திட பொங்கல் மடையுமிட்டு:
முத்துமாரி அம்மன் மனம் குளிரவைத்தீர்!
முத்திபெற்று அருள் சக்தி பெற்றிட;
இரத்தினமே எங்கள் ஐயா!–எம்மை
நித்தநித்தம் காத்தருள்வீர் கருணையுடன்
பக்தியுடன் பத்தும் பற்றுகிறோம் நின்பாதம்!
சக்தியுடன் சேர்த்துமையே வணங்குகின்றோம்.
ஈஸ்வரி இணையே இறஞ்சுகிறோம் போற்றி போற்றி

என்றும் தங்கள் நினைவுடன்
மனைவி,மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

பெருங்குளம் பிள்ளையார்வீதி,
கல்வயல்-சாவகச்சேரி.

(சி-11119)

# பாதிப்புற்ற மக்களுக்கான நிவாரணப் பணி; தொண்டர் நிறுவனங்களின் உறுதிமொழி!

(அலுவலக செய்தியாளர்)

கடல் கொந்தளிப்பால் பாதிப்புற்ற மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு தீர்மானிக்கப்பட்ட அவசரகால செயலணிக்குழுவின் முள்ளியவளை செயலணிக்குழுக் கூட்டம் கடந்த 28.12.2004 அன்று நடைபெற்றபோது அங்கு உதவி புரியும் தொண்டர் நிறுவனங்களால் அளிக்கப்பட்ட உறுதி மொழிகள்.

இத் தொண்டர் நிறுவனங்களிடமிருந்து உணவு, குடிநீர், உடை, மருத்துவம், இருப்பிட வசதி போன்ற அடிப்படையில் உதவிகள் பெறப்பட்டன. அவற்றின் ஒழுங்கின்படி உறுதிமொழி வழங்கிய தொண்டர் நிறுவனங்களின் பெயர்களும், அவர்கள் வழங்கிய பொருட்களின் விபரமும் பின்வருமாறு;

**உணவு: உலக உணவுத் தாபனம்,** ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு: * 400 கிராம் அரிசி அல்லது மா *60 கிராம் பருப்பு, * 30கிராம் சீனி என்ற விகிதத்தில் 15 நாட்களுக்கு இருபத்து இரண்டாயிரம் பேருக்கு உணவுப்பொருள் வழங்கல். இது இருபத்துநான்கு மணிநேரத்தில் கிடைக்கும் எனக் கூறப்பட்டது.

* 3 தொடங்கி ஐந்து வயதுக் குழந்தைகளுக்கான திரிபோசா போன்ற உணவு,

**போரூட் நிறுவனம்:-** * இரண்டு இலட்சரூபா பெறுமதியான பருப்பு, கடலை போன்ற பொருட்கள்.

**சோஆ நிறுவனம்:-** 2250 பைக்கற் பால்மா

**வேள்ட் விசன்:-** இரண்டு இலட்சம்ரூபா பெறுமதியான சமபோசா, உடனடி நூடில்ஸ், பயறு, கொண்டற் கடலை.

**சிறுவர் பாதுகாப்பு நிதியம்:-** *.சீனி அறுநூற்று ஐம்பது கிலோ *.பால்மா 650 பைக்கற் * பிஸ்கட் 1000 பக்கற் * நூடில்ஸ் 1000 பைக்கற்.

**சேவா லங்கா:-** ஒருகோடி ரூபா பெறுமதியான பொருட்கள் * இரண்டு லொறி லோட் அரிசி *180 மூடை மாவு * 60 மூடை சீனி * பால்மா 3000 பைக்கற் * 60 மூடை பருப்பு * ஏனைய பொருட்கள் மிகுதிப் பணத்திற்கு வழங்கப்படும்.

**குடிநீர்:-** முல்லைப் பட்டினத்திற்கும் 17 நலன்புரி நிலையங்களுக்கும் தேவையான நீர்த்தாங்கிகள்.

| நிறுவனம் | கொள்ளளவு | எண்ணிக்கை |
|---|---|---|
| ஒக்ஸ்பாம் | 1000 லீற்றர் | 10 |
| யுனிசெவ் | 1000 லீற்றர் | 10 |
| போரூட் | 1000 லீற்றர் | 10 |
| வேல்ட் விசன் | 1000 லீற்றர் | 05 |
| சோஆ | 1000 லீற்றர் | 10 |
| பாஜ் | 1000 லீற்றர் | 05 |
| தமிழர் புனர்வாழ்வுக் கழகம் | 1000 லீற்றர் | 20 |
| சேவா லங்கா | 1000 லீற்றர் | 28 |
| ஐ.சி.ஆர்.சி | 1500 லீற்றர் | 02 |
| மொத்தம் | | 100 |

**யுனிசெப்** * 1லீற்றா நீர்ப் போத்தல் 8600 * நோர்வே மக்கள் உதவி அமைப்பு (NPA) இரண்டு தண்ணீர் பவுசர் (உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

சேவா லங்கா:- * இரண்டு தண்ணீர் பவுசர்கள் வழங்கும்

**வவுனியா அரச அதிபர்:-** * ஒரு தண்ணீர் பவுசர் வழங்குவார்.

**உடை**

யுனிசெவ்:-* பெட்சீட் 2300 * துவாய் 2300 * ரீசேட் 800

*வெள்ளத் துணி 23 றோல்

போரூட்:- * 500,000 ரூபா பெறுமதியான உடைகள்

கெயார்:- 2.6 மில்லியன் ரூபா பெறுமதியான உடை.

சிறுவர் பாதுகாப்பு நிதியம்:- * பெட்சீட் 650 *. துவாய் 650 சோஆ:- 700 சாறம் * 700 மக்சி * 700 ஸ்கேட் *700 பிளவுஸ் *700பேபி சூட் *1000 பெட்சீட் *1000 துவாய்கள் * பெண்களுக்கான சுகாதார பை 500

பாஜ்:- 200,000 ரூபா பெறுமதியான உடைகள்.

வேள்ட் விசன்:- பெட்சீட் 750 .

**மருத்துவம்**

ஐ.சி.ஆர்.சி:- * 5000 லீற்றர் குளோறின் * 5000 லீற்றர் லைசோல் * வைத்தியகலாநிதி க. பத்மலோசினி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களிற்கேற்ப மருந்துப் பொருட்கள் கொள்வனவு செய்து கொடுப்பதாக உறுதிமொழி வழங்கப்பட்டது.

**இருப்பிட வசதி**

யு.என்.எச்.சி.ஆர்:- * 7000 தளப்பால், 7000 பிளாஸ்ரிக் விரிப்பு,

ஒக்ஸ்பாம்:- * 50 மீற்றர் நீளமான தறப்பாள் 30 றோல், * 100 மீற்றர் நீளமான பிளாஸ்ரிக் நிலவிரிப்பு 25, சோஆ:- 50 மீற்றர் நீளமான தறப்பால் 30 றோல், * மீளச் செல்பவர்களுக்கான 100 தற்காலிக குடில், சர்வோதயம்:- 500 பாய்கள், 500 சவர்க்காரம், 1000 கோப்பைகள், 1000ஜக், 300 நுளம்பு வலைகள்.

**ஏனையவை**

யுனிசெப்:-* 2300 பாய், 9000 சவர்க்காரம், 650 சமையல் பானைகள், 500 சுடுதண்ணீர் போத்தல்கள்,

சிறுவர் பாதுகாப்பு நிதியம்:- * 650 பாய், * 175 நுளம்புவலை சிறுவர்களுக்கானது, * 200 போச்சிப் போத்தல், * 1300 சவர்க்காரம், * 650 ஓடிக்கொலோன், * 650 டெற்றோல் போத்தல் * 650 டெற்றோல் பிளாஸ்டர், * 650 பனடோல் காட்.

வேள்ட்விசன்:-

* 330 வயது வந்தவர்களுக்கான பொதித்தொகுதி, * 330 சிறுவர்களுக்கான பொதித்தொகுதி, 2000சோப், 200 சிறுவர் பொதிகள், *700 கப்
* 7000 கோப்பைகள்,

ஒக்ஸ்பாம்:- *.800 பாய்

ஐ.சி.ஆர்.சி:-

* அவசர கால உதவிப் பொதி 800. ஒரு பொதிக்குள் (இரண்டு பாய், ஒரு பிளாஸ்ரிக் விரிப்பு, ஒரு அலுமினிய சட்டி தொகுதி பிளாஸ்ரிக் வாளி, 5 சவர்காரம், இரண்டு துவாய், மூன்று பெட்சீட் அடங்கும்)

போரூட்:-

* 500 கோப்பைகள்
*. 500 நில விரிப்புக்கள் 10 மீற்றர் நீளமானவை.

சோஆ:-

*. 70 போச்சி போத்தல்கள் இவைகளுடன் அப்பகுதி வாழ் மக்களும் தங்களால் இயன்றளவு உடனடி தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றனர். (கு,ச)

## நியூசிலாந்து செல்லுமா இந்தியா?

நியூசிலாந்தில் விளையாடி வந்த இலங்கை கிரிக்கெட் அணி, தொடரைப் பாதியில் ரத்துச் செய்து விட்டு நாடு திரும்பியுள்ளது. இதனையடுத்து இந்திய அணி. நியூசிலாந்துடன் விளையாடுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.


இது குறித்து இந்திய கிரிக்கெட் சபை தலைவர் ரன்பீர் சிங் மகேந்திராவிடம் வியாழக்கிழமை நிருபர்கள் கேட்டபோது அவர் கூறியதாவது;நியூசிலாந்திடம் இருந்து இதுவரை எவ்விதமான வேண்டுகோளும்இந்திய கிரிக்கெட் சபைக்கு வரவில்லை. இந்திய வீரர்களும் அடுத்தபெப்ரவரியில்தான் பாகிஸ்தானுடன் விளையாட உள்ளனர். நியூசிலாந்து கிரிக்கெட்சபையில்இருந்து வேண்டுகோள் வரும் பட்சத்தில், அது குறித்து செயற்குழு கூடி முடிவு செய்யும் தற்போது வேறு ஏதும் என்னால் கூறமுடியாது முதலில் அழைப்பு வரட்டும் அதன்பிறகு பார்க்கலாம் என்றார் ரன்பீர் சிங் மகேந்திரா.



சுனாமி அலைத் தாக்கத்தினால் இலங்கை பேரழிவைச் சந்தித்ததைத்தொடர்ந்து நியூசிலாந்து சுற்றுப் பயணத்தைஇடைநடுவில் இரத்துச் செய்து நாடு திரும்பும் முன்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கும் மாவன் அத்தப்பத்துவையும், இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களையும் படங்களில் காணலாம்.

## டர்பன் டெஸ்ட் போட்டி

### டிவிலியர்ஸ், பொலக் நிதான ஆடுப்பாட்டம் இங்கிலாந்தின் வெற்றிக் கனவு தகர்ந்தது



டர்பன் டெஸ்டில் நேற்று முன்தினம் போதிய வெளிச்சம் இல்லாததால் இங்கிலாந்தின் வெற்றி வாய்ப்பு பறிபோனது. கடைசி வரை போராடிய தென்னாபிரிக்க அணி ஒரு வழியாகப் போட்டியைச் சமன் செய்தது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இங்கிலாந்து அணி ஐந்து டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. இரண்டாவது டெஸ்ட் டர்பனில் நடைபெற்றது. இதில் இங்கிலாந்து அணி முதல் இனிங்சில் 139 ஓட்டங்களுக்கு சுருண்டது. பதிலுக்கு தென்னாபிரிக்க அணி முதல் இனிங்சில் 332 ஓட்டங்களைக் குவித்தது. கால்லிஸ் 162 ஓட்டங்களை எடுத்தார். அடுத்து இரண்டாம் இனிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி ஏழு விக்கெட் இழப்புக்கு 570 ஓட்டங்கள் என்ற நிலையில் டிக்ளேர் செய்தது. ஆட்டமிழக்காது தோர்ப் 118 ஓட்டங்களைப் பெற்றார். இதையடுத்து தென்னாபிரிக்காவுக்கு 378 ஓட்டங்கள் என்ற கடின இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.


வெற்றி இலக்கு நோக்கி ஆட ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி நான்காம் நாள் ஆட்ட முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 21 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் கடைசி மற்றும் ஐந்தாம் நாள் ஆட்டம் நடந்தது. இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் துல்லியமாகப் பந்துவீச, தென்னாபிரிக்க விக்கெட்டுக்கள் விரைவாக வீழ்ந்தன. இது தென்னாபிரிக்காவுக்கு மிகப் பெரும் பின்னடைவாக அமைந்தது. பின்னர் அனுபவ போலக் மற்றும் டிவிலியர்ஸ் இணைந்து அணிக்கு நம்பிக்கை தந்தனர். இவர்கள் 8ஆவது விக்கெட்டுக்கு 85 ஓட்டங்களைச் சேர்த்தனர். போலக் 36 ஓட்டங்களுக்கு ரன் ஆவுட்டாக தென்னாபிரிக்கா தோல்வியின் பிடியில் சிக்கியது. இந்த நேரத்தில் டிவிலியர்ஸ், நிடினி ஜோடி மனம் தளராமல் போராடியது. இவர்களுக்கு இயற்கையும் கைகொடுத்தது. போதிய வெளிச்சம் இல்லை என்று கூறி நடுவர்கள் ஆட்டத்தை முன்னதாகவே முடிக்க, போட்டி சமன் ஆனது.



## பிரீமியர் லீக் கால்பந்து தொடர் செல்சியா அணி முன்னிலையில்

பிரீமியர் லீக் கால்பந்து தொடரில் செல்சியா கிளப் அணி முன்னிலையில் இருந்து வருகிறது.

இங்கிலாந்தின் பல்வேறு பகுதிகளிலும் கிளப் அணிகளுக்கு இடையிலான பிரீமியர் லீக் கால்பந்து தொடர் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் அர்செனல், நியூகேஸ்டில் அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில் அர்செனல் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. உலகின் முன்னணி வீரர்கள் இடம் பெற்றுள்ள மான் செஸ்டர் யுனைடெட் அணி1-0 என்ற கோல் கணக்கில் அஸ்டன் வில்லாவை தோற்கடித்தது. இந்த வெற்றியின் மூலம் செல்சியா 49 புள்ளிகள் பெற்று தொடர்ந்து முதல் இடத்தைத் தக்க வைத்துள்ளது.



வரும் சனவரி 3இல் கட்டார் ஓபன் டெனிஸ் போட்டிகள் தொடங்கவுள்ளன. இதில் பங்கேற்பதற்காக டோஹா வந்து சேர்ந்த சுவிற்சர்லாந்தின் முதல் நிலை டெனிஸ் வீரர் ரோஜர் பெடரரை (இடது) அழைத்துச் செல்கிறார். கட்டார் டென்னிஸ் பெடரேஷன் தலைவர் வேக் முகம்மது.



## சிந்தனைக்கு



உழைக்கும் மக்களின் உழைப்புச் சக்தியே ஒரு தேசத்தின் ஜீவாதார சக்தி.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 01-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@eezhanatham.com

## ஒத்துழைப்பு கிட்டுமா?

தமிழர் தாயகத்தில் ஏற்பட்ட அனர்த்தத்தில் இருந்து மக்களை மீட்டெடுத்து நிவாரணம் வழங்கும் பணிகளை விடுதலைப்புலிகள் இயக்கம் தீவிரமாக முனைப்புப் படுத்தியுள்ளது. இப்பணியானது இரண்டு வகையில் மேற்கொள்ளப்படுவதாகவுள்ளது.

ஒருபுறத்தில், மீட்புப்பணி என்ற வகையில் பேரழிவுகளைச் சந்தித்த பிரதேசங்களை வழமைக்கு கொண்டுவர பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் சடலங்களை தேடி எடுத்து புதைத்தல் அன்றி எரித்தல், அப்பிரதேசத்தில் அழிவுக்குட்பட்டவற்றை துப்புரவு செய்தல், சுத்தப்படுத்தல், சுகாதாரம் பேணுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அதாவது அழிவுற்றுப் போயுள்ள பகுதிகளில் இருந்து இடிபாடுகள், அழிவுக்குள்ளான பல்வேறுபட்ட பொருட்கள், குப்பை கூழங்கள் போன்றவை அப்புறப்படுத்தப்பட்டுவருகின்றன. அதேசமயம், இப்பிரதேசங்களில் தொற்று நோய்கள் மற்றும் சுகாதாரப்பாதிப்புக்கள் நிகழாத வண்ணம் சுகாதாரம்போணும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இம் மீட்பு நடவடிக்கையில் விடுதலைப்புலிகளின் கட்டளைத்தளபதியில் இருந்து பல்வேறு படையணிகளைச்சேர்ந்த போராளிகள் மற்றும் வேறு பிரிவுகளைச்சேர்ந்தவர்களும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர். இதேவேளை துய்மைப்படுத்தல் சுகாதாரத்தைப்பேணுதல் போன்ற பணிகளில் விடுதலைப்புலிகளின் மருத்துவப்படையணியுடன் தியாகிதிலீபன் மருத்துவப்பிரிவினரும் பங்காற்றி வருகின்றனர்.

இதேவேளை மீட்பு நடவடிக்கைகளுக்கு அப்பால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணப் பணிக்கென அவசரகாலப் செயலணிக்குழு மாவட்ட ரீதியில் விடுதலைப்புலிகளால் அமைக்கப்பட்டுள்ளது /அமைக்கப்பட்டு வருகிறது. இக்குழுவானது நிவாரணப்பணிகளை ஒழுங்குபடுத்துபவர்களுடன் ஒன்றாகச் செயற்பட்டுவருகின்றது. இப்பணியில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல், நிர்வாகப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தற்பொழுது மாவட்ட ரீதியில் அமைக்கப்பட்டுள்ள இச் செயலணிக்குழுவை தேசியரீதியிலானதாக்க விடுதலைப்புலிகள் முற்பட்டு நிற்கின்றார். ஆனால், இதற்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்பானது கிடைக்கப்பெறுதல் என்பது தேவையானதாகவுள்ளது.

சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவின் தற்போதைய அறிவிப்புக்கள், பேச்சுக்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலிகளால் அமைக்கப்பட்ட செயலணிக்குழுவிற்குச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக அறிவித்திருப்பினும் அவ் ஒத்துழைப்புக் கிடைக்கப்பெற்றபின்னரே அது குறித்துப் பேச முடியும்.

ஏனெனில் சிறிலங்கா அரசாங்கம் குறிப்பாக சனாதிபதிசந்திரிகா குமாரதுங்க நேரத்திற்கொன்று பேசவும் பேசியதை மறுக்கவும் கூடியவர். இதற்கு எடுத்துக் காட்டாக அவரின் சமாதான நிலைப்பாட்டினையே எடுத்துக்கூற முடியும். அதாவது சமாதானப்பேச்சுக்களுக்கான ஏற்பாட்டாளராக செயற்படும் நோர்வே அரசாங்கத்தை தாமே அழைத்ததாகக்கூறும் சுதந்திரக்கட்சியினர் நோர்வே அரசின் பணிக்கு இடையூறுகளை விளைவிப்பதும் உண்டு.

இதேசமயம் தமிழர் புனர்வாழ்வுப்பணிக்கான செயற்குழுவிற்கு ஜே.வி.பியின் ஆதரவு அரசாங்கத்திற்குத் கிடைக்கப்பெறுமா என்பது சந்தேகமே. ஏனெனில் யுத்த அழிவுகளில் இருந்து மீள்வதற்கான சில உதவிகளை அரசாங்கம் செய்யலாம் என எதிர்பார்க்கப்பட்ட வேளையில் கூட ஜே.வி.பி.அதற்கு முட்டுக்கட்டையாகவே இருந்தது.

இந்தவகையிலேயே விடுதலைப்புலிகளுடன் இணைந்தோ அன்றி விடுதலைப்புலிகளின் செயலணிக்குழுவுடன் சேர்ந்து அரசாங்கம் பணியாற்ற ஜே.வி.பி.அனுமதிக்குமா என்பதுசந்தேகமே. ஏற்கனவே இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து ஜே.வி.பி. போட்ட கூப்பாடும், கூச்சலுமே சமாதானப்பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படாமல் போனமைக்கான காரணமாகும்.

இந்நிலையில் மக்களுக்கு நிவாரணமளிக்கவென உருவாக்கப்பட்ட அவசர செயலணிக்குழுவிற்கு சனாதிபதி சந்திரிகா வழங்குவதாகத் தெரிவித்த ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்குவரா? வழங்க முடியுமா? என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் ஜே.வி.பி.யினைப்பொறுத்த வரை மனிதாபிமான நடவடிக்கை என்பதைவிட பேரினவாதச் சிந்தனையே வலுவானதாகவுள்ளது. ஆகையினால் செயலணிக்குழுவிற்கு அரசாங்கத்தரப்பால் கிடைக்கக்கூடிய உதவிகள் கிடைத்த பின்னரே சனாதிபதியின் கூற்றுக்களை உறுதி செய்ய முடியும்.

# புலிகளுக்குப் பாரிய இராணுவ இழப்பென சந்திரிகா உள்ளூர மன மகிழ்ச்சி!

(கொழும்பு)

"நாடு கடந்த 25ம் திகதி வரை எதிர்நோக்கியிருந்த யுத்த அச்சுறுத்தலிலும் பார்க்க தற்போது அதன் வேகம் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. கடந்த 26ம் திகதி இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் விடுதலைப் புலிகளுக்குப் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உள்ளூர மகிழ்ந்து கொண்டார். மாத்தறை, காலி ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்த பின்னர் கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில். கரையோரங்களிலிருந்த கடற்புலிகளின் முக்கிய தளங்கள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டன. அவர்கள் இராணுவ ரீதியாக உச்ச அழிவைச் சந்தித்திருக்கிறார்கள்.

சிறிலங்கா இராணுவத்தினரும் கிழக்குக் கரையோரத்தில் ஆயுத தளபாடங்கள் மற்றும் வாகனங்கள் எனப் பாரிய இழப்பைச் சந்தித்திருக்கிறார்கள்" என்று கூறியுள்ளார்.

நாடு சந்தித்துள்ள இழப்புப் பற்றிய புள்ளி விபரங்கள் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்-

''கடற் புவிநடுக்கத்தால் ஏற்பட்ட பேரலை அனர்த்தத்தினால் உயிரிழந்த இலங்கையர்களின் எண்ணிக்கை காணாமல் போனவர்களுடன் சேர்த்து 29 ஆயிரத்தை அண்மித்துக்கொண்டுள்ளது. இன்னும் ஓரிரு நாட்களில் இது குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடுவோம்.- என்றார்

இயற்கை அனர்த்தத்தினால் புலிகளுக்கு இழப்பு ஏற்பட்டதாகக் கூறி ஆசுவாசப்பட்டுள்ள சனாதிபதியின் கூற்றுக் குறித்து அரசியல் அவதானிகள் கருத்து வெளியிடுகையில்,

இந்த அரசு பேரழிவை மையமாகக் கொண்டு அரசியல் நடத்துகிறதா என்ற சந்தேகம் வந்துள்ளது எனத் தெரிவித்துள்ளனர்.

# திருமலையில் நிவாரணப் பணித் திட்டங்கள் ஒழுங்கு படுத்தப்படவில்லை!

*–புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர்*

மக்கள் பாதிக்கப்பட்டு 6 தினங்கள் கடந்தும் இன்னமும் நிவாரணம் வழங்கப்படவில்லை. இப்பணிகளை ஒழுங்குபடுத்தும் வேலைத்திட்டங்கள் ஒரு முகப்படுத்தப்படவில்லை. செல்வநாயகபுரம் பாடசாலையில் 8,000இற்கும் அதிகமான மக்கள் அகதிகளாக இருக்கின்றனர். விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில்

அங்கு 4 மலசலகூடங்களே இருக்கின்றது. மக்கள் அவசர கடமைகளை நிறைவேற்றுவதற்கு மிகுந்த கஷ்ரப்படுகின்றார்கள். உரிய அலுவலகங்கள் இவ் விடயத்தில் தலையிட்டு தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். நிவாரணப்பொருட்கள் ஒவ்வொரு இடத்திற்கும் சென்றடைய வேண்டும். திருகோணமலை மாவட்டத்திற்கு வரும் நிவாரணப் பொருட்கள் நகரத்தில் வைத்து இராணுவத்தினரால் மறிக்கப்பட்டு அவை வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. தற்போது மஸ்கெலியாவில் இருந்து 20 லொறிகளில் வந்த நிவாரணப் பொருட்கள் திருகோணமலை கண்டி வீதியால் வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. இது விரும்பத்தகாத செயற்பாடாகும் என்றார்.

திருகோணமலை மாவட்டத்தில் கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பணிகளை மேற்கொள்ளவும், வேண்டிய வசதி களை செய்து கொடுப்பதற்கும் வசதியாக மாவட்ட செயலணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மதியம் 12.00 மணிக்கு நடைபெற்றது இதில் கருத்துத் தெரிவிக்கையிலேயே எழிலன் மேற்கண்டவாறு கூறினார்.

இதில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், க.துரைரெட்ணசிங்கம். ஜெயந்த விஜயசேகர, விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் இராணுவ பொலிஸ் அதிகாரிகளும் சர்வதேச உள்ளூர் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர அங்கு கருத்துத் தெரிவிக்கையில் மக்களுக்கு வேண்டிய நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் பேதம் இருக்கக் கூடாது. ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் மேற்கொள்ள வேண்டும்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கான நிவாரணங்கள் மாவட்ட செயலகத்தின் ஊடாகவும், கட்டுப்பாடற்ற பகுதி மக்களுக்கான பொருட்களை வழங்குவதற்கு கந்தளாயில் தான் ஒரு அலுவலகத்தை அமைத் திருப்பதாகவும் இவைகள் ஊடாக நிவாரணப் பொருட்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 271 பாடசாலைகள் சேதம்!

கடற்பெருக்கினால் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 271 பாடசாலைகள் அழிந்து அல்லது சேதமடைந்துள்ளதாகவும் புதிய கல்வி ஆண்டு ஆரம்பமாவதற்கு முன்பு அவற்றை திருத்தவும் புனரமைக்கவும் 135.5 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ. தியாகலிங்கம் அறிவித்துள்ளார்.

'சுனாமி' தாக்கத்தினால் வடக்குக் கிழக்கில் கல்வித் துறைக்கு ஏற்பட்ட அழிவுகள் சேதங்கள் பற்றி, மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் தலைமையில் அவசரக்கூட்டம் நடத்தப்பட்டது.

மாகாணக் கல்வி பணிப்பாளர் இ.விசாகலிங்கம் உட்பட உயரதிகாரிகள் பலர் கூட்டத்தில் பங்கு பற்றினர். கல்வித் துறைக்கு ஏற்பட்ட பாதிப்புகள் அவ்வவ்விடங்களுக்கு நேரில் சென்று ஆய்வு நடத்துவதற்காக கல்வி அதிகாரிகளைக் கொண்ட 06 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், கல்முனை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய கல்வி மாவட்டங்களில் இவ்வாய்வுகள் நடத்தப்பட்டுள்ளன கடற்பெருக்கில் உயிரிழந்த மாணவர், ஆசிரியர், அதிபர்கள், கல்வி சாரா ஊழியர்களின் எண்ணிக்கை சேகரிக்கப்படவுள்ளது. அழிவுற்ற பாடசாலைகள், கல்வி அலுவலகங்கள், கல்விசார் விடுதிகள், வாகனங்கள், தளபாடங்கள், சீருடைகள் பாடப் புத்தங்கள் ஆகியவற்றை இழந்த மாணவர்களின் விபரமும் ஆய்வின் போது திரட்டப்படவுள்ளது.

# தமிழர் ஆசிரியர் சங்கம் ஒரு லட். ரூபா உதவி!

## புனர்வாழ்வு நிதி செயற்றிட்டம்

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் கடற் கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஒரு இலட்சம் ரூபாவை நன்கொடையாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கையளிக்கவுள்ளது. இன்னும் சில நாட்களில் இப்பணம் கையளிக்கப்படும் என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

இதே வேளை பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்காக விசேட நிதி சேகரிப்புத் திட்டம் ஒன்றை செயற்படுத்துவதற்கு சங்கம் தீர்மானித்துள்ளதாகவும், அவர் கூறினார். இதனடிப்படையில் ஆசிரியர்கள், அதிபர்கள் தங்களின் ஒரு மாதச் சம்பளத்தை இந்த நிதிக்கு வழங்க வேண்டும். அல்லது அரசாங்கத்தினால் டிசம்பர் மாதத்தில் வழங்கப்படவுள்ள சம்பள உயர்வுப் பணமான 2500 ரூபாவை முழுமையாக வழங்க வேண்டும் என்றும் சங்கம் கோரிக்கை விட்டுள்ளது. எனினும் பாதிக்கப்பட்ட அதிபர்கள், ஆசிரியர்களிடமிருந்து இந்த நிதி சேகரிக்கப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணியிலும், புனர்வாழ்வுப் பணியிலும், முழுமையாக ஈடுபடுமாறும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களையும், சங்க நிர்வாகிகளையும் சங்கம் கோரியுள்ளது.

- வடமராட்சி கிழக்கு செயலணிக்குழுவிடம் -

# கிடைக்கப்பெற்ற நிவாரணங்களில் 98 சதவீதம் வழங்கப்பட்டுவிட்டன!

(அலுவலக செய்தியாளர்)

இதுவரை கிடைக்கப்பெற்ற உதவிப் பொருட்களில் 98 வீதமான பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுவிட்டதென வடமராட்சி கிழக்கு புதுக்காட்டுச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள செயலணிக் குழு அலுவலகத்தில் நேற்று மாலை அரச அதிகாரிகளுடன் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 5.00 மணிக்கு புதுக்காட்டுச் சந்தியில் அமைந்துள்ள அவசர செயலணி அலுவலகத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்கள் விநியோகிப்பது தொடர்பாக பேசப்பட்டது. இக்கூட்டத்தில் வடமராட்சி கிழக்குப் பகுதியில் இருந்து பாதிக்கப்பட்ட மக்களின் தொகை கணக்கெடுப்பு நாளைய தினம் நிறைவடையும் எனக் கூறப்பட்டது.

இதேவேளை, கடல் அனர்த்தத்தால் பெரிதும் துன்பப்பட்டுப் போயிருக்கும் மக்களிடம் பல நிறுவனங்கள் தனித்தனியாகப் போய் புள்ளி விபரங்கள் சேகரிப்பதை நிறுத்தி அவசர செயலணி அலுவலகத்தில் புள்ளி விபரங்களை பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதில் கிளி. அரச அதிபர், மேலதிக அரச அதிபர், பிரதேச செயலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். மேற்படி கூட்டம் கிளி. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் தலைமையில் நடைபெற்றது. (லோ, தீ)

## தொடர்புகொள்க!

சிவஜோதி வீதி முல்லைத்தீவைச் சேர்ந்த ஆறுமுகம் நிறோசா (றோஸ்) செல்வராணி (தாய்) மற்றும் இக் குடும்பத்தில் உள்ள 6 பேர் கடந்த 26.12.2004 அன்று நடைபெற்ற கடலனர்த்தத்தினால் காணாமற் போயுள்ளனர். நிறோசா, செல்வராணி ஆகியோரை உருத்திரபுரம் 8ஆம் வாய்க்காலைச் சேர்ந்த வாணி எங்கிருந்தாலும் தொடர்பு கொள்ளுமாறு கேட்கின்றார்.

# ஹொலின் பவல் அடுத்தவாரம் கொழும்பிற்கு விஜயம்

அமெரிக்காவின் வெளிவிவகார ராஜாங்க அமைச்சின் செயலர் ஹொலின் பவல் அடுத்த வாரம் சிறிலங்காவுக்கு விஜயமாகவுள்ளார்.

சமுத்திரப் பேரலையின் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமெரிக்கா தற்போது வழங்கிய உதவியை விட மேலதிகமாகத் தேவைப்படுகிறதா? என்பதை நேரில் கண்டறியவே அவர் சிறிலங்காவுக்கும், தாய்லாந்துக்கும் விஜயம் மேற்கொள்வதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. பவலுடன் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின. சகோதரர் மற்றும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சிலரும் சிறிலங்காவுக்கு செல்லவுள்ளனர். பேரலை அனர்த்தத்தினால் 14 அமெரிக்கர்கள் உயிரிழந்துள்ளனர். சுமார் 600 பேர்வரை காணாமல் போயுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## கனடா...

கனடாவில் வதியும் வைத்தியர்கள் எண்மர், மருத்துவத்துறை மாணவர் ஒருவர், மருத்துவத் தாதி ஒருவர் எனப் பத்துப் பேரடங்கிய மேற்படி முதற்கட்டக் குழு நேற்று மாலை ரொறன்ரோவிலிருந்து தமது பயணத்தை ஆரம்பித்துள்ளது.

## தமிழர்...

கத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. இதன் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் சென்றடைவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. மாவட்ட அரசாங்க அதிபர் செயலகத்திற்கு வந்த சேரும் பொருட்கள் பாதிக்கப்படாத சிங்கள மக்கள் வாழும் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. மாவட்ட செயலகத்தில் காணிக் கிளை அலுவலகத்தில் நிவாரணப் பொருட்கள் மலைபோன்று குவித்து வைக்கப்பட்டுள்ளது. இவற்றில் அத்தியாவசியப் பொருட்கள் எவையும் தமிழ்-முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அதிகளவு அனுப்பி வைக்கப்படவில்லை. உடுதுணிகள் அதிகளவில் இப்பகுதிகளுக்கு அனுப்பி வீவக்கப்படுகின்றது. குழந்தைகளுக்குத் தேவையான பால்மா, பாற்புட்டிகள் அதிகளவில் காணப்பட்டாலும் அவைகள் வழங்கப்படவில்லை. .பாதிப்பு ஏற்படாத பதவிசிறிபுர பிரதேச செயலாளர் பிரிவுக்கு 77 கூடாரங்களும், கோமரன்கடவெலவுக்கு 40 கூடாரங்களும் 3671 குடும்பங்கள் பாதிக்கப்பட்ட குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு 40 கூடாரங்களும் நேற்று மாவட்ட செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## வெளிநாட்டு....

பணிக்கெனவும், மருத்துவ சேவைக்கெனவும் ஆளனிகளும், நிவாரணப்பணி நடவடிக்கைக்கென இந்தியாவில் பல உலங்கு வானூர்திகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக இந்திய அரசு இதுவரையில் ஐந்து கப்பல்களில் மருந்து மற்றும் அவசர தேவைக்கான பொருட்களையும் பல மருத்துவக்குழுக்களையும், பல உலங்குவானூர்திகளையும், மீட்புப்பணிக்கென இராணுவத்தினரையும் அனுப்பிவைத்துள்ளது.

இதேசமயம் பல நாடுகளில் கடந்த 27 ஆம் திகதியிலிருந்து நேற்றுவரை கொழும்பிற்கு இருநூறு வானூர்திகளில் நிவாரணங்கள் எடுத்துவரப்பட்டுள்ளன. பல வானூர்திகள் விமான நிலையத்தில் ஏற்பட்ட இட நெருக்கடி காரணமாக திருப்பி அனுப்பப்பட்டும் உள்ளன.

இந்த வகையில் பெரும் எடுப்பில் நிவாரணப் பொருட்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றபோதும் தமிழர்தாயகப் பகுதிக்கென அவற்றில் எவையும் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்பதோடு ஏனைய வசதிகளும் பயன்படுத்தப்படுவதாகவும் இல்லை.

இதேசமயம் தமிழர் தாயகப்பகுதியில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு அவலத்திற்கு உள்ளாகியுள்ள தோடு தமது அவசிய தேவைகள் நிறைவேற்றப்படாது பெரும் அவதிக்குள்ளாகியுமுள்ளனர்.

குறிப்பாக மருந்துப்பொருட்கள் பற்றாக்குறை, மருத்துவர்கள் பற்றாக்குறை மற்றும் குழந்தைகளுக்கான தேவைகள் என்பன கிடைக்கப்பெறாமல் உள்ளன.

அதுமட்டுமல்லாமல் பாதைகள் துண்டிக்கப்பட்டதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கோட்டைக்கல்லாறு, அம்பாறை மாவட்டங்களில் சில கிராமங்கள் தரைவழிப்போக்குவரத்து இன்மை யால் முதற்கட்ட அத்தியாவசிய தேவைகள் கூடச்சென்றடையாமலும் உள்ள இதனால் மக்கள் பெரும் அவலத்தை எதிர்நோக்கியுள்ளனர். ஆயினும் சிறிலங்கா அரசு இவற்றில் அக்கறை செலுத்துவதாக இல்லை.

## வீரவணக்கம்....

தற்போதைய முகவரி விக்கி குடியிருப்பு,அம்புலவன் பொக்கணை, முல்லைத்தீவு, என்பவரே சாவடைந்தவராவார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## சிக்கிப்....

ஒத்துவராத இரசாயன கனிமங்களும் கலந்திருக்கச் சாத்தியக் கூறு உள்ளது.

இவ்வாறு இரசாயன கனிமங்கள் கலந்த கடல் நீரில் மூழ்கித் தப்பியவர்களினது சுவாச தொகுதியினுள் இவ் இரசாயன கனிமங்கள் கலந்த கடல் நீர் புகுந்திருப்பதாலேயே இவர்களுக்கு சுவாசநோய்கள் ஏற்பட்டுள்ளன எனத் தெரிவிக்கும் வைத்திய அதிகாரிகள்.

கடல் நீரில் மூழ்கித் தப்பிய பலர் மூச்சுத்திணறல், பீலிசம், தும்மல் போன்ற நோய்களால் அவதியுறுவதாகவும் தெரிவிக்கின்றனர் (33)

## சுனாமி...

உள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் அப்பகுதியில் குன்றுகள் மேல் ஓடிச்சென்று உயிர்தப்பிய மக்களுக்கு உணவும் மருந்தும் மிகவும் தேவைப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

## அம்பாறையில்...

வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, பொத்துவில் குண்டுமடு, வட்டவெளி, ஏத்தம், ஊரணி, தாண்டியடி பகுதிகளில் சுமார் 1500இற்கு மேற்பட்ட தமிழ்க்குடும்பங்கள் அகதிகளாக தங்கியுள்ளபோதும் அவற்றிற்குரிய நிவாரணங்கள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் இயங்கிவரும் இளைஞர் கழகம் இது தொடர்பாக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திற்கு முறையிட்டுள்ளது. இதேவேளை, இரண்டு சதவீதம் நிவாரணங்களே குறிப்பிட்ட பகுதிகளுக்கு கிடைத்து வருவதாக இளைஞர் கழகத்தின் உறுப்பினர் ஜோதிக்குமார் தெரிவித்துள்ளார்.

# அவுஸ்.தமிழ் மாணவர்கள் நிதி சேகரிப்பு

இயற்கை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழீழ மக்களுக்கு நிவாரண நிதி சேகரிப்பதற்காக அவுஸ்திரேலிய மெல்பேர்ன் வாழ் தமிழ் மாணவர்கள் ஒன்றுகூடி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து நேற்று முன்தினம் நிதி சேகரிப்பில் ஈடுபட்டனர்.

காலை 9மணி தொடக்கம் மாலை7 மணிவரை மெல்பேர்ன் நகரத்தில் உள்ள Buyke street mall எனுமிடத்தில் சிறிய மேடையில் தமிழர்களின் பாரம்பரிய வாத்திய இசைக்கருவிகளுடனும், மேலைத் தீய வாத்திய இசைக் கருவிகளையும் இணைத்து இசைத்து மக்களின் கவனத்தை ஈர்க்கச் செய்து கடற்புவி நடுக்கத்தினால் ஏற்பட்ட அழிவுகளை வெளிப் படுத்தும் புகைப்படங்களும், சுவரொட்டிகளும் பார்வைக்கு வைக்கப்பட்டு அச்சுற்றாடலில் உண்டியல் மூலம் மாணவ அமைப்புச் செயற்பாட்டாளர்களால் நிதி சேகரிக்கப்பட்டது. மக்களிடமிருந்து அவசர நிவாரண நிதி யாக சுமார் 20,000 அவுஸ்திரேலிய டொலர்கள் சேகரிக்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும், தமிழர் ஒருங்கிணைப்புக்குழு செயற்பாட்டாளர்களும் ஒன்றிணைந்து அவுஸ்திரேலியா, மெல்பேர்ன் நகரில் புலம் பெயர்ந்த தமிழீழ மக்களை ஒன்று திரட்டி பல பகுதிகளிலும் உள்ள பல்லின மக்களை வீடு வீடாகச் சென்று அணுகி உண்டியல் மூலம் நிதி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## ஒருங்கிணைப்பு கூட்டம்

02.01.2005 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு "சுனாமி கடல் கொந்தளிப்பு" அனர்த்தம் தொடர்பான ஒருங்கிணைப்புக்கூட்டம் ஒன்று வழமையாக நடைபெறும் இடமான நெல்லியடியில் நடைபெறவுள்ளது என யாழ். அரச அதிபரின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது. இவ் இணைப்புக்கூட்டத்துடன் தொடர்புடையவர்களை தவறாது பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (33)

# திருமலையில் 5000 குடும்பங்களுக்கு த.பு.க நிவாரணப் பொருட்கள்!

கடற்பூகம்பத்தினால் பாரிய அழிவுகளுக்குள்ளாகி நிர்க்கதியாகியுள்ள திருமலை. மாவட்டத்தின் மூவின மக்களுக்கும் உதவிகளை மேற் கொண்டு வரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேற்று முன்தினம் அன்று மட்டும் ஐந்தாயிரம் குடும்பங்களுக்கு பாய், பெற்சீற், பால்மா, உட்பட இதர பொருட்களை வழங்கியுதவியுள்ளது.

சுமார் 60 இற்கு மேற்பட்ட நலன்புரி நிலையங்களில் இவ் உதவிப் பொருட்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழக தொண்டர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களின் சுகாதார, மருத்துவ பிரச்சினைகளையும் தேவைகளையும் கண்டறிந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு உதவிகளைப் பெற்று வருகின்றது. திருமலையில் பாதிக்கப்பட்ட மக்களின் உயிர். உடைமை, இழப்புக்களை சரியாக மதிப்பீடு செய்யும் பணிகளிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சி கிழக்கில் மேலும் 7 சடலங்கள்

வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்புப் பணி நடவடிக்கைகளின் போது ஏழு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளது. நேற்றைய தினம் இடம்பெற்ற மீட்பு நடவடிக்கைகளின்போது இவ் ஏழு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ((லோ.தீ)

DMI


A/L-2007(கலை வர்த்தகப் பிரிவுகள்)

சனவரி-08

காலை 8.00 மணி

DMI Jaffna

(சி-11158)



## சாவு அறிவித்தல்

அமரர்

ஆறுமுகம் சண்முகராசா

(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்)

பிறப்பு: 01-10-1926

இறப்பு: 31-12-2004

வேலணையைப் பிறப்பிடமாகவும், புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் - சண்முகராசா 31.12.2004 நேற்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசலட்சுமியின் அன்புக் கணவரும், சந்திரகுமாரனின் (புதுக்குடியிருப்பு ம.வி.) அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா வள்ளியம்மையின் மருமகனும், இராமச்சநதிரன் (பிரான்ஸ்) ஜெயரதி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 01.01.2005 இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல் :-
மகன்,
சந்திரகுமார்.

(5521)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.